பரிசுத்தராய் இருங்கள்

Be Holy

தொகுப்பு

போதகர் அல்பிரட் செருபிம்
மீட்பர் கிறிஸ்து சபை
பிரம்டன் - கனடா

Publisher

Pastor S. Alfred Cherubim
Redeemer Christ Assembly
Brampton - Canada

Year of Publication	:	April 2010
No. of Copies	:	1000
Quality of the Paper	:	Maplitho
Gsm.	:	80 Gsm.
Author	:	**Pastor.S.Alfred Cherubim**
Printed at	:	SJS OFFSET PRINTERS, 75-B, Singaryar Colony, North Street, Madurai - 2.

சமர்ப்பணம்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். அடியேனுடைய வாழ்க்கையில் எனது ஆயுசு நாட்களைக் கூட்டிக்கொடுத்து சுகத்தோடும், புதுபெலத்தோடும் பாதுகாத்து, எல்லா நிலைமையிலும் என்னைத் தாங்கி, ஏந்தி, சுமந்து, தப்புவித்து வருகிற தேவாதி தேவனுக்கே சகல கனமும், துதியும், மேன்மையும், புகழும், உயர்வும் உரித்தாகுக. தேவன்தாமே அவருடைய இரக்கத்தின் ஐசுவரியத்தின் நிமித்தம் அடியேனுக்கும் மனைவிக்கும், பிள்ளைகளையும், பிள்ளைகளுடைய பிள்ளைகளையும் காணவைத்து, அவருடைய வாக்குத்தத்தங்களை எமது வாழ்க்கையில் நிறைவேற்றிப் பாராட்டிய மகாபெரும் அன்பிற்காக, அவருடைய பொற்பாதத்தில் சாஸ்டாங்கமாக விழுந்து வணங்குகிறேன்.

தேவன் அருளிய ஞானத்தோடும், பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலோடும் **"பரிசுத்தராய் இருங்கள்"** என்னும் தலையங்கத்தில் அடியேன் இப்புத்தகத்தை எழுதி முடிக்க கிருபையளித்த தேவனுக்குக் கோடா கோடி ஸ்தோத்திரம். நான் பரிசுத்தனாய் இருக்க வேண்டும் என்ற எனது வாஞ்சையான ஜெபத்திற்கு தேவன் எனக்குப் பதில் கொடுப்பதோடு, இப்புத்தகத்தை வாசிப்பவர்கள் ஒவ்வொருவரும் பரிசுத்தராய் இருக்க வேண்டுமென்பது எனது விருப்பமும் ஊக்கமான ஜெபமுமாய் இருக்கிறது. கர்த்தர்தாமே இந்தப் புத்தகத்தை ஆசீர்வதித்து பலருக்கு ஆசீர்வாதமாக அமைய அனுகூலம் செய்வாராக. தேவனுடைய மேன்மையான நாமத்தை மகிமைப்படுத்த இப்புத்தகத்தை அடியேன் சிரம் தாழ்த்தி அவர் பாதத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும், இப்புத்தகத்தை எழுதி முடித்து வெளியிடும்வரை எனக்கு ஒத்தாசை தந்து, ஜெபத்தில் தாங்கி பல வகையிலும் உதவிய எமது சபை மக்கள், எனது மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப் பிள்ளைகள் அனைவருக்கும் எனது அன்பையும் நன்றியையும் தெரிவிக்கிறேன்.

"உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்". - 1 பேதுரு 1:15.

பாஸ்டர் அல்பிரட் செருபிம் **Pastor. S. Alfred Cherubim**

905 - 970 1842
647 - 271 7645
alfred_cherubim@rogers.com
www.redeemerchristassembly.org

Redeemer Christ Assembly
253, Summerlea Road, Unit 8
Brampton, On. L6T 5A8
CANADA

பரிசுத்தராய் இருங்கள்

“நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே”. — 1 பேதுரு 1:16.

பரிசுத்தம் என்ற சொல்லிற்கு கர்த்தராகிய தேவாதி தேவனைத் தவிர வேறு ஒருவரையோ ஒரு படைப்பையோ மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவை-களுக்கு ஒப்பான எதையுமே அவருக்கு நிகராக ஒப்பிட்டுக் காட்ட முடியாது. பரிசுத்தத்திற்கு நிகர், பரிசுத்தராகிய பரம தேவன் மட்டும் தான். பரலோக இராட்சியத்தில் கோடா கோடி தேவ தூதர்கள் எல்லா வேளைகளிலும் அந்த பரிசுத்த தேவனை பரிசுத்தர்! பரிசுத்தர்!! பரிசுத்தர்!!! என்று துதித்துக்கொண்டே இருக்கின்றனர். அவருடைய பரிசுத்தத்திற்கு முன்னதாக எந்த ஒரு படைப்பும் நிற்கமுடியாது.

“கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங் களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்?” - யாத்.15:11.

பரிசுத்தரான தேவன், பாவம் அறியாதவர், பழுப்படாதவர், பாகுபாடு காட்டாதவர், சகலத்திலும் ஒழுங்குள்ளவர், நீதிபரர், ஒன்றிலும் தவறாதவர், இப்படியாக அவருடைய பரிசுத்த மகத்துவத்தை விபரிக்க வார்த்தைகளே போதாது. அவருடைய பரிசுத்தத்தை வேதாகமம் மேலும் விபரித்துக் கூறுகிறதாவது :

“அவர் கன்மலை, அவர் கிரியை உத்தமமானது, அவர் வழிகளெல்லாம் நியாயம், அவர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன், அவர் நீதியும் செம்மையுமானவர்”. - உபா. 32:4.

தேவனுடைய பரிசுத்தத்தில் இரண்டு முக்கியமான அம்சங்கள் உண்டு

முதலாவது, ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தில் விபரித்திருக்கும்

அவருடைய **மகத்துவமும் மேன்மையும்**, தேவ தூதர்களால் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று துதிக்கும் துதி.

“... ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கக் கண்டேன், அவருடைய வஸ்திரத்தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது. சேராபீன்கள் அவருக்கு மேலாக நின்றார்கள், அவர்களில் ஒவ்வொருவனுக்கும் அவ்வாறு செட்டைகளிருந்தன, அவனவன் இரண்டு செட்டைகளால் தன் தன் முகத்தை மூடி, இரண்டு செட்டைகளால் தன் தன் கால்களை மூடி, இரண்டு செட்டைகளால் பறந்து, ஒருவரையொருவர் நோக்கி: சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள். கூப்பிடுகிறவர்களின் சத்தத்தால் வாசல்களின் நிலைகள் அசைந்து, ஆலயம் புகையினால் நிறைந்தது”.- ஏசா.6:1-4.

இரண்டாவதாக காணப்படும் குணாதிசயம், அவருடைய **தூய்மையான நற்குணம்.** உலகத்தின் தீமைகளால் கறைபடாததும் தொடுபடாததுமான பரிசுத்த நிலை. இவைதான் எமது வாழ்க்கைக்கும் வேண்டியதான எடுத்துக்காட்டும், தேவையுமாய் இருக்கிறது. தேவனுடைய சகல குணாதிசயங்களையும் பெயரிட்டுப் பார்ப்போ- மாயின், அவருடைய பரிசுத்தம் எல்லாவற்றிற்கும் மேலாகவும் முன்னதாகவும் இருப்பதைக் காணலாம். உதாரணமாக அன்பு தேவனுடைய குணாதிசயங்களில் ஒன்றாக இருந்தாலும், அந்த அன்பு ஒரு பரிசுத்த அன்பு. அவருடைய பிரசன்னம் - பரிசுத்த பிரசன்னம், அவருடைய சிங்காசனம் - பரிசுத்த சிங்காசனம், அவருடைய வார்த்தை - பரிசுத்த வார்த்தை. இப்படியாக அவருடைய சகல குணாதிசயங்கள், செயற்பாடுகள் யாவும் பரிசுத்தமானவை.

“தேவரீர் பரலோகத்திலிருந்து கண்ணோக்கி, **பரிசுத்தமும் மகிமையுமுள்ள உம்முடைய வாசஸ்தலத்திலிருந்து** பாரும்,...” - ஏசாயா 63:15.

"...கர்த்தர் நிமித்தமும், அவருடைய **பரிசுத்த வார்த்தைகளினிமித்தமும்** நான் வெறித்திருக்கிற மனுஷனைப்போலவும் மதுபானம் மேற்கொண்டவனைப் போலவும் இருக்கிறேன்". - எரேமியா 23:9.

"தேவன் ஜாதிகள்மேல் அரசாளுகிறார், தேவன் தமது **பரிசுத்த சிங்காசனத்தின்மேல்** வீற்றிருக்கிறார்". சங்கீதம் 47:8.

"அப்பொழுது அவர்: இங்கே கிட்டிச்சேராயாக, உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு, நீ நிற்கிற இடம் **பரிசுத்த பூமி** என்றார்". - யாத்.3:5.

"பரிசுத்தம்" என்று சொல்லும்போது அது சாதாரணமான, தெய்வீக மற்ற, வேண்டாத, உலகத்திற்குரிய நிலையிலிருந்து பிரித்தெடுக்கப் பட்ட அல்லது துண்டிக்கப்பட்ட தன்மையைக் கருதுகிற ஒரு நிலை.

"பரிசுத்த நாள்" என்று சொல்லும்போது அது ஏனைய நாட்களைவிட ஒரு பிரத்யேகமான நாள். அதேபோல "பரிசுத்த பூமி" என்று கூறும்போது அவ்விடம் மற்ற இடங்களைவிட பிரித்தெடுக்கப்பட்ட விசேஷ பூமி. இப்படியாக "பரிசுத்தம்" என்னும் தூய வார்த்தை தேவனுடைய பரிசுத்தத்தோடு இணைந்த ஒரு சொல்லாக அமைகிறது.

1. தேவனுடைய பரிசுத்தம் அவருடைய வார்த்தைக்கூடாக விளங்குகிறது.

God's holiness is known through His Word.

வேதாகமத்தில் காணப்படும் படிப்பினைகள், பரிசுத்த தேவனிடத்திலிருந்து உண்டாகி, பரிசுத்த ஆவியானவர் மூலம் உந்தப்பட்டு, தேவ மனுஷர்களால் எழுதப்பட்ட ஜீவ வார்த்தைகள். எனவேதான் அதை பரிசுத்த வேதாகமம் என்று கனப்படுத்திக் கூறுகிறோம்.

"தேவன் தமது பரிசுத்தத்தைக் கொண்டு விளம்பினார், ஆகையால் களிகூருவேன், ..." - சங்கீதம் 60:6.

"வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது.

தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை, தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்". - 2 பேதுரு 1: 20-21

இன்று எம் அண்டையில் எம்மை அறிவூட்டக்கூடிய, களிகூற வைக்கும் அநேக புத்தகங்கள் இருந்தபோதும், ஆத்துமம், பரலோகம், கடவுள், மரணம் என்பனவற்றை நோக்குமிடத்து இன்று எமக்கு ஜீவியத்திற்கு பரிசுத்த அடிப்படையும் ஆதாரமும் உள்ள ஒரு புத்தகம் வேண்டியதாய் இருக்கிறது.

பரிசுத்தம், பரிசுத்த வாழ்க்கை, பரிசுத்த அழைப்பு, பரிசுத்த அன்பு, பரிசுத்த சுவிசேஷம் போன்றவைகள் குறித்து வெளிப்படுத்தும், வலியுறுத்தும், அறிவுறுத்தும் ஒரு புத்தகம் சகல மனித சமுதாயத்திற்கும் அவசியம் வேண்டியதாய் இருக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தோடும் வழிநடத்துதலோடும் மேற்பார்வையிலும் பாதுகாப்போடு எழுதப்பட்ட "பரிசுத்த வேதாகமம்" மட்டுமே அப்படிப்பட்ட ஒரே புத்தகமாக உலகில் விளங்குகிறது. பரிசுத்த வாழ்க்கை வாழ வேண்டுமாயின் ஒவ்வொரு மனிதனும் இப்புத்தகத்திலுள்ள ஜீவ வார்த்தைகளைப் படித்து அல்லது கேட்டு அதன்படி ஜீவித்தால் பரிசுத்தத்தை அடைவது மட்டுமல்ல, மரித்தாலும் நித்தியம் நித்தியமாக பரிசுத்த தேவாதி தேவனோடு பரலோக இராட்சியத்தில் ஜீவிப்போம் என்ற நிச்சயத்தையும் பெறலாம்.

எம்மைச் சூழ்ந்து வாழும் இவ்வுலக மக்கள் பரிசுத்த வேதாகமத்தையும் அதிலுள்ள சத்தியத்தையும், அறிவுரைகளையும், போதனைகளையும் ஒருவேளை ஏற்றுக்கொள்ளாமல் அல்லது நாட்டமில்லாமல், ஏன்? முற்றாக உதாசீனம்கூடச் செய்யலாம், ஆனால் ஒரு உண்மையான கிறிஸ்தவனுடைய பரிசுத்தமான பேச்சும், நடத்தையும் வாழக்கையும் அப்படியான ஜனத்துடைய கவனத்தை கட்டாயமாகக் கவரத்தான் செய்யும். அப்படியாக மற்றவர்களுடைய கவனத்தை ஈர்க்கக்கூடிய ஒரு பரிசுத்த வாழ்க்கை வாழ நாம் முன் ஒருபோதும் இல்லாதவாறு தேவன் தம் பரிசுத்தத்தில் விளம்பிய பரிசுத்த ஜீவ வார்த்தைகளுக்குச் செவி சாய்த்து அதன்படி ஜீவிக்க வேண்டியது அதிக அவசியம்.

2. தேவனுடைய பரிசுத்தம் பாவ வாழ்க்கையை தண்டிக்கும்

God's holiness will punish sinful living

தேவனுடைய பரிசுத்தம் பாவத்தை நியாயந்தீர்க்க வலியுறுத்துகிறதை பரிசுத்த வேதாகமம் முழுவதிலும் காணக் கூடியதாய் இருக்கிறது. மேலும் "வெளிப்படுத்தின விசேஷம்" புத்தகத்தில் வரப்போகிற நியாயத்தீர்ப்பையும், மிகுந்த உபத்திரவத்தையும் குறித்து விபரிக்கப்பட்டிருப்பதையும் காணலாம்.

"அப்பொழுது தேவாலயத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தம் அந்த ஏழு தூதருடனே நீங்கள் போய்த் தேவனுடைய கோபகலசங் களைப் பூமியின்மேல் ஊற்றுங்கள் என்று சொல்லக்கண்டேன். முதலாம் தூதன் போய், தன் கலசத்திலுள்ளதைப் பூமியின்மேல் ஊற்றினான், உடனே மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்களும் அதின் சொரூபத்தை வணங்குகிறவர்களுமாகிய மனுஷர்களுக்குப் பொல்லாத கொடிய புண்ணுண்டாயிற்று. இரண்டாம் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் சமுத்திரத்திலே ஊற்றினான், உடனே அது செத்தவனுடைய இரத்தம் போலாயிற்று, சமுத்திரத்திலுள்ள பிராணிகள் யாவும் மாண்டுபோயின. மூன்றாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆறுகளிலும், நீரூற்றுகளிலும் ஊற்றினான், உடனே அவைகள் இரத்தமாயின.. அப்பொழுது தண்ணீர்களின் தூதன்: இருக்கிறவரும் இருந்தவரும் பரிசுத்தருமாகிய தேவரீர் இப்படி நியாயந்தீர்க்க நீதியுள்ளவராயிருக்கிறீர். அவர்கள் பரிசுத்தவான் களுடைய இரத்தத்தையும் தீர்க்கதரிசிகளுடைய இரத்தத்தையும் சிந்தினபடியினால், இரத்தத்தையே அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தீர், அதற்குப் பாத்திரராயிருக்கிறார்கள் என்று சொல்லக் கேட்டேன்". - வெளி.16: 1-6

நாம் தேவனோடு இடைப்படும்போது ஒரு மகா பரிசுத்தருடன் சம்பந்தப்படுகிறோம் என்பதையும், அவருடைய எதிர்பார்ப்புகள் பாரதூரமானவைகள் என்பதையும், ஏனைய அசுத்தங்களிலிருந்து பிரத்தியேகமான உன்னத நிலையில் நிற்பவர் என்பதையும் நினைவு கூரவேண்டும். தேவனுடைய பரிசுத்தம் ஆதாமின் ஒரு பாவத்திற்காக அவனையும் அவன் மனைவியையும் ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தியது. காயீனுடைய ஒரு பாவம் அவனுடைய பரம்பரைக்கே

சாபத்தைத் தேடிக்கொண்டது. மோசேயின் ஒரு பாவம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் போக அவனை அனுமதிக்கவில்லை. எலியா தீர்க்கதரிசியின் வேலைக்காரனுடைய ஒரு பாவம் அவனுக்குக் குஸ்டரோகத்தைக் கொண்டுவந்தது. அனனியா சப்பீராள் அவர்களுடைய ஒரு பாவம் அவர்கள் இருவருடைய மரணத்தைக் கொண்டுவந்தது. இப்படியாக தேவனுடைய மகா பரிசுத்தம் ஒவ்வொரு பாவத்திற்கும் தண்டனையைக் கொண்டுவரும். ஆனால் பாவத்தை அறிக்கை செய்து மன்னிப்பைப் பெற தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுவை சிலுவையின் மரணத்திற்கு கிருபாதாரப் பலியாக ஒப்புக் கொடுத்ததின் நிமித்தம் தமது மகா பெரும் அன்பை வெளிப்படுத்தின படியால் அவருக்கு ஸ்தோத்திரம்.

"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான், விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று". - யோவான் 3: 16-18.

3. தேவனுடைய பரிசுத்தம் பாவநிவிர்த்திக்கான இரத்தப் பலியை எதிர்பார்க்கிறது

God's holiness demands blood atonement

தேவனுடைய பரிசுத்தம் என்பது, அவர் ஏற்படுத்திய நிபந்தனையின் அடிப்படையில் மட்டும்தான் அதை அடையவும், அவரண்டை கிட்டிச் சேரவும் முடியும். பாவ மன்னிப்பிற்கு பாவ நிவிர்த்திப் பலியாக "இரத்தம் சிந்துதல்" அவருடைய நிபந்தனையில் அடங்கியிருக்கிறது. ஆகையால் பரிசுத்தம் பெற இரத்தம் சிந்துதல்

அவசியம்.

“நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும், இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது”. - எபிரெயர் 9: 22

“அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது”. - எபே. 1: 7

“(குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது”. -கொலோ.1: 14.

“குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே”. - 1 பேதுரு 1: 19

தேவனுடைய பரிசுத்தத்தை அவருடைய நிபந்தனையின் அடிப்படையில் மட்டுமே அடைய முடியும். பாவ மன்னிப்பிற்கு பாவநிவிர்த்தி பலியாக “இரத்தம் சிந்துதல்” அவசியம் என்பது அவருடைய நிபந்தனையில் அடங்கியிருக்கிறது. இன்று அநேக மக்கள் தமது நற்கிரியைகளினால் தேவனண்டையில் கிட்டிச்சேர முற்படுகின்றனர். எப்படியெனில், நான் ஒரு நல்ல கணவன், ஒரு நல்ல தாய், நல்ல வேலைக்காரன், நல்ல நண்பன் என்று தமது நல் நடத்தைகள் பரிசுத்தத்திற்குப் போதும் என்று நினைக்கின்றனர். ஆனால் தேவனுக்கோ எமது நீதியெல்லாம் அழுக்கான கந்தையைப்போல இருக்கிறது.

“நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம், எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது, நாங்கள் அனைவரும் இலைகளைப்போல் உதிருகிறோம், எங்கள் அக்கிரமங்கள் காற்றைப்போல் எங்களை அடித்துக்கொண்டு போகிறது”. - ஏசா. 64: 6.

தேவனுடைய பரிசுத்தத்தின் எதிர்பார்ப்பெல்லாம், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எமக்காகச் சிலுவையிலே செய்து முடித்த கிரியை களை விசுவாசிப்பதின் மூலம் அடையலாம் என்றும், தேவனுடைய

பரிசுத்த வசனம் கூறுகிற பிரகாரம் அவரண்டை வந்து அவரை ஏற்றுக் கொள்பவர்கள் அந்நிலையை பெறுவதும் உறுதிப் படுத்தப்பட்டிருக்கிறது.

“முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார். நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையைவிட்டு அசையாமல், ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும்”. - கொலோ. 1: 21-22.

4. தேவனுடை பரிசுத்தம் எமது நடத்தையின் தரத்தை நிர்ணயிக்கிறது.

The Holiness of God Sets the Standard for Our Conduct.

தேவனுடைய பரிசுத்தம் எமது நடத்தையின் தரத்தை வகுக்கிறதற்கு ஏதுவாக அமைகிறது.

“சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற் குள்ளும் உங்களை நடத்துவார், அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்”. - யோவான் 16: 13.

“தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது, அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான். இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும், நீதியைச் செய்யாமலும் தன் சகோதரனில் அன்புகூராமலும் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல”. - 1 யோவான் 3: 9-10.

“தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று

அறிந்திருக்கிறோம், தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்". - 1 யோவான் 5: 18

நாம் "வாழ்க்கைத் தரம்" என்பதைக்குறித்து பேசும்போது, ஒருவருடைய உணவு, உடை, உறவிடம், வாழ்க்கை என்பனவற்றின் அடிப்படையில் அவருடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்ததா? குறைந்ததா? என்று கணிக்கிறோம். பொருளாதார ரீதியில் எமது வாழ்க்கைத் தரத்தை எமது வைப்புகள், கணக்குகள், பொருட்கள், சொத்துகள் என்ற அடிப்படையில் தீர்மானிக்கிறோம். ஆனால் எமது ஆன்மீக வாழ்க்கைத் தரத்தை தீர்மானிப்பது, எம்மிலுள்ள தேவனுடைய பரிசுத்தத்தின் குணாதிசயத்தின் அளவில் தங்கி யிருக்கிறது. எனவே எமது வாழ்க்கை தெய்வீக குணாதிசயங்களின் சாயல் உள்ளதாக அமையவேண்டும். தேவனுடைய குணாதிசயம் எமது நடத்தைக்கு அடித்தளமாக அமைகிறது, அது சரியானதைக் கடைப்பிடிக்கவும், பிழையானதை வெறுக்கவும் செய்கிறது.

ஆலயத்திற்குப் போவதினாலோ, வேதாகமத்தை வாசிப்ப தினாலோ எமது தவறுகளை மூடி மறைக்க முடியாது. பரிசுத்தத்திற்கு நிகர் பரிசுத்தம் மட்டுமே! அந்தப் பரிசுத்தம் இல்லாமல் தேவனைத் தரிசிக்க முடியாது.

"மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினி மித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பின வருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்". - ரோமர் 8: 10-11

5. **தேவனுடைய பரிசுத்தம் தேவனை பாவத்தின் எதிரியாக்குகிறது.**

   The Holiness of God Makes God the Enemy of Sin

தேவனுடைய பரிசுத்த நினைவும் சிந்தனையும் எப்போதும் பாவத்தை எதிர்க்கிறதாகவே இருக்கிறது. பாவம் நற்சிந்தனைக்கு எதிரானதென்பதை அவருடைய குணாதிசயத்தின் அம்சமும், படைப்பினதும் ஆளுகையினதும் நோக்கமாய் இருக்கிறது. பாவம் தேவனுடைய பரிசுத்த நினைவைத் தோற்கடிக்க நேரடியாக எதிர்கொள்கிறது, ஆகையால் தேவன் பாவத்தை எப்பொழுதும் எதிர்த்தே செயற்படுகிறார். எனவே பாவம் தோற்கடிக்கப்படும்.

"இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன். பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்". - ரோமர் 6: 22-23.

"அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக் குரியவைகளைச் சிந்திக்கிறார்கள், ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்சசிந்தை மரணம்: ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். எப்படியென்றால், மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை: அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது. மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்க மாட்டார்கள். தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களா யிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும்". - ரோமர் 8: 5-10.

6. **தேவனுடை பரிசுத்தம் நாம் அவரை நம்புவதற்கு உத்தரவாதம் அளிக்கிறது.**

   Holiness of God Guarantees that We Can Trust Him.

தேவனுடைய பரிசுத்தம், அவரை நாம் முழுமையாக நம்புவதற்கு உத்தரவாதம் அழிக்கிறதுமல்லாமல் நாம் ஏமாற்றம் அடையாதபடியும்

பாதுகாக்கும். அந்த நம்பிக்கை எம்மை ஒருபோதும் வெட்கப்பட்டுப் போக அவர் விடமாட்டார். மேலும் தேவனுடைய பரிசுத்தம் நாம் அவர்மேல் நம்பிக்கை வைப்பதற்கு உறுதியான ஆதாரமாயும் இருக்கிறது. அவர் வாக்கு மாறாதவர், சொன்னதைச் செய்கிறவர், சொல்லியும் செய்யாமல் இருப்பதற்கு அவர் மனுஷனல்ல. அவ்வளவாக அவரை நாம் நம்பலாம், அது அவருடைய பரிசுத்தத்தின் குணாதிசயம், அதில் மாற்றமுமில்லை மாறுதலும் இல்லை, அதுவே எமக்கு உத்தரவாதம்.

"கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கை யாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டைடையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத்தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனிகொடுக்கிறதுமான மரத்தைப் போலிருப்பான்". - எரேமியா 17: 7-8.

"யாக்கோபின் தேவனைத் தன் துணையாகக் கொண்டிருந்து, தன் தேவனாகிய கர்த்தர்மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான். அவர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவையும் உண்டாக்கினவர், அவர் என்றென்றைக்கும் உண்மையைக் காக்கிறவர்". - சங்கீதம் 146: 5-6.

"கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார், நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்". -சங். 55: 22.

நம்பிக்கைக்குப் பாத்திரரான கர்த்தரை நாம் முற்றும் முழுவதுமாக நம்பலாம். ஆகையால்தான் அவருடைய வார்த்தைகளும் வாக்குத் தத்தங்களும் ஆம் என்றும் ஆமென் என்றும் சொல்லப்படுகிறது.

பரிசுத்தமும் நீதியும் - Holiness & Righteousness

"பரிசுத்தம் - நீதி" இவ்விரண்டு வார்த்தைகளும் ஒன்றோடு ஒன்று சம்பந்தப்பட்டவை. இவ்வார்த்தைகள் இரண்டு அம்சங்களைக்

கொண்ட ஒரே நிலைப்பாட்டை உடையதாய் வேதத்தில் காணப் படுகிறது. பரிசுத்தம் ஒருவருடைய குணாதிசயத்தோடு (character) சம்பந்தப்பட்டது. "நீதி" ஒருவருடைய நடத்தையோடு (conduct) சம்பந்தப்பட்டது. எப்படி ஒரு மரத்தின் வேரும், கனியும் நெருங்கிய தொடர்புடையதாய் இருக்கிறதோ அப்படியே இச்சொற்கள் இரண்டும் அமைந்திருக்கின்றன. வேர் இல்லாமல் கனி இருக்க முடியாதது போல பரிசுத்தம் இல்லாமல் நீதியாய் செயற்பட முடியாது. பரிசுத்தம் தான் எம்மை நீதியாய் நடப்பிக்கிறது.

"பரிசுத்தம்" ஒருவர் இருக்கும் நிலையை விபரிக்கிறது, "நீதி" அவருடைய நடத்தையை விபரிக்கிறது. ஆகையால் நாம் பரிசுத்தமாய் இருக்கவும் நீதியாய் நடக்கவும் தேவனால் அழைக்கப்பட்டவர்கள், எனவே அதற்கு அமைய ஜீவிக்க வேண்டுமாயின் எமது வாழ்க்கையை தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து தேவ ஆவியானவரின் வழிநடத்துதலோடு வாழ முன்வரவேண்டும்.

"இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன் "பாவத்தின் சம்பளம் மரணம்", தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்". ரோமர் - 6: 22-23.

"இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிற படியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்". - 2 கொரி. 7: 1.

"இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே. அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே

கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்". - எபேசியர் 4: 21-24.

"தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். ஆகையால் அசட்டைபண்ணுகிறவன் மனுஷரை அல்ல, தமது பரிசுத்தஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டைபண்ணுகிறான்". - 1 தெசலோ. 4: 7-8.

"யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களா யிருக்கவும் நாடுங்கள், பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே". - எபிரெயர் 12: 14.

ஒவ்வொரு மனிதனும் பரிசுத்தமாய் வாழவேண்டும் என்பது தேவனுடைய எதிர்பார்ப்பு. ஆனால் சத்துருவான பிசாசானவன் ஒவ்வொரு மனிதனையும் தன் வசப்படுத்தி, உலக ஆசைகளைக் காட்டி அவனை கண்களின் இச்சைக்கும், மாமிசத்தின் இச்சைக்கும், ஜீவனத்தின் பெருமைக்கும், ஆளாக்கி அவனை மோசம்போக்கி, பாவத்தில் விழுத்தி அவனை பரிசுத்த வாழ்க்கை வாழ விடாதபடிக்கு தடை செய்கிறான். இந்த நிலையிலிருந்து தப்பித்து வாழ வேண்டு மாயின் உலகில் ஒரே வழிதான் உண்டு. அதாவது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை ஒருவன் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, தேவ நீதிப்படி முழுக்கு ஞானஸ்நானம் எடுத்து, பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலோடு ஜீவிக்கும்போது சத்துருவான பிசாசின் சோதனைகட்கு ஆளாகாதபடி பரிசுத்த ஜீவியம் ஜீவித்து தேவனைப் பிரியப்படுத்தலாம்.

பரிசுத்தமும் ஆவியும் - Holiness and the Spirit

தேவன் பரிசுத்தராய் இருக்கிறதுபோல நாமும் இருக்க தேவன் எம்மை பரிசுத்தத்திற்கென்று அழைக்கிறார். "பரிசுத்த ஆவி" என்று

கூறும்போது, ஆவியானவர் பரிசுத்தர் என்பது தெளிவாகிறது. ஆவியானவர் எமக்குள் வாசம் செய்கிறார் அல்லது ஆவியானவரால் நிரப்பப்பட்டுள்ளோம் என்று சொல்லும்போது, அவருடைய பரிசுத்தம் எமக்குள் இருக்கிறதா என்பதற்கு விடை காணவேண்டியதாய் இருக்கிறது.

பரிசுத்தம் என்றால் என்னத்தைக் கருதுகிறோம்? பரிசுத்த வாழ்க்கை என்பது தேவனுக்குப் பிரியமுள்ளவர்களாக வாழ்ந்து, தேவ ராஜ்யத்திற்கு அடுத்தவைகளின் நோக்கத்தோடு ஜீவிப்பதாகும். இப்படியான ஒரு ஜீவியத்தை நாமாக அமைத்துக்கொள்ள நாம் தனித்து செயற்பட முடியாது. ஆவியானவர் மட்டுமே எம்மை இயேசுவின் பரிசுத்த நிலைக்கு கொண்டுவர ஒத்தாசை அளிக்க முடியும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நாம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு வாழும்போது எமக்குள் வந்து வாசம் செய்யும் ஆவியானவர் எம்மைப் பரிசுத்தத்திற்குள் வழிநடத்துகிறார். நாம் ஒன்றிற்கும் தகுதியற்றவர்கள் என்பதை உணர்ந்தவர்களாய், உடைந்த உள்ளத்தோடு பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலுக்கு எம்மை ஒப்புக்கொடுக்கும்போது, அவர்தாமே வேதாகமத்தின் வார்த்தைகளுக்கூடாக தேவனைப் பிரியப்படுத்தி வாழ்கிற வாழ்க்கையை எமக்குத் தெரியப்படுத்தி அதன்படி ஜீவிக்கிற வாஞ்சையையும் விருப்பத்தையும் எமக்குள் ஏற்படுத்துவார்.

"சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார், அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடை யவைகள், அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்". - யோவான் 16: 13-15.

"நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது

என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ள மாட்டாது, அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்". - யோவான் 14: 16-17.

"என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப் பூட்டுவார்". யோவான் 14: 26.

"அன்றியும் அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும்போது, அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான், நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்".-அப்போ.1: 4-5.

"பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்".-அப்போ. 1: 8

"அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள், உங்கள் மூப்பர் சொப்பனங் களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர்மேலும் ஊழியக்காரிகள்மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்". - யோவேல் 2: 28-29.

பரிசுத்தம் என்றால் என்ன?

பரிசுத்தத்தைக் குறித்து மேலே பார்த்த விஷயங்களை

நோக்குமிடத்து, "பரிசுத்தம்" என்றால் என்ன? என்ற கேள்வி எழும்புகிறது. பரிசுத்த நிலையில் இருப்பதை பரிசுத்தம் என்கிறோம், அது ஒருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையின் நிலையை வெளிப்படுத்துகிறது. அது ஒரு ஆலயத்தையோ, சபையையோ, ஒரு சமயப் பிரிவையோ சார்ந்தவர்களைக் கருதுவதல்ல.

அல்லது ஒரு ஆலயமோ, சபையோ, அவற்றின் பெயர்களிலே "பரிசுத்தம்" என்ற சொல்லை வைப்பதனால் அதைச் சேர்ந்தவர்கள் பரிசுத்தமாகிவிட முடியாது. அதேவேளை சில சந்தர்ப்பங்களில் அப்படிப் பெயரையுடைய ஆலயத்தில் அல்லது சபைகளில் உள்ளவர்கள் உண்மையாகவே பரிசுத்தர்களாய் இருக்கலாம். இப்படியாக பரிசுத்தம் என்றால் என்னவென்பதை தெளிவுபட அறிந்து செயற்படவேண்டும்.

அடுத்து வரக்கூடிய கேள்வி "எப்படி பரிசுத்தமில்லாத ஒரு பாவி, பரிசுத்தம் அடையலாம்"? மேலும் "அவன் பரிசுத்தம் அடைந்தபின எப்படி பாவமான சூழ்நிலையிலும், பாவச்சோதனைகளிலும் தன் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்வான்"?

இக்கேள்விகளுக்குப் பதிலாக நாம் அறிந்துகொள்ள வேண்டியது: முதலாவது தேவனால் ஒரு அற்புதம் நடவாமல் ஒரு பாவி பரிசுத்த மாக்கப்படவோ, தொடர்ந்து அதில் நிலைத்திருக்கவோ முடியாது. "தேவனால் சகலமும் கூடும்" மேலும் வேதத்தில் சொல்லப்பட்ட பிரகாரம் தேவனுடைய கட்டளைகளின்படி நடக்கவேண்டும்.

"ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள். நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படியே இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து, உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லா வற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால்

நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே. அன்றியும் பட்சபாத மில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந் தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டு வருகிறபடியால், இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்து கொள்ளுங்கள். உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக் களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்ற மில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப் பட்டீர்களென்று அறிந்திருக் கிறீர்களே". - 1 பேதுரு 1: 13-19.

அற்புதத்தின் முதற்பகுதி

அற்புதத்தின் முதற்பகுதியாக ஒரு பாவி, தான் பாவி என்பதை முழுமையாக ஏற்றுக்கொண்டு அதற்காக மனஸ்தாபப்பட்டு, விசுவாசத்தோடும் ஜெபத்தோடும் இயேசுவிடம் வரவேண்டும். அப்பொழுது அவன் தேவனுடைய கிருபை வரமாக இலவசமான இரட்சிப்பையும், நித்திய ஜீவனின் நிச்சயத்தையும், ஆவியின் வழி நடத்துதலையும் கிறிஸ்து இயேசு மூலமாக பெற்றுக்கொள்கிறான்.

"பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்". - ரோமர் 6: 23.

இப்படியாக ஒரு பாவி ஒரு புதுப்பிறவியாக, பழயன ஒழிந்து சகலமும் புதியனதாக, வாஞ்சையோடு தனது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உணவாக வேத வசனத்தைப் படிப்பதிலும், ஜெபிப்பதிலும், ஆவிக்குரிய வல்லமையோடு பாவச் சோதனையை எதிர்த்து நிற்கவும் முற்படுகிறான். அப்பொழுது தேவன் அவனுக்குக் கொடுத்த பரிசுத்த ஆவியினால் அவனை ஒரு புதுப்பிறவியாக்குகிறார்.

"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. இவையெல்லாம் தேவனாலே உண்டா யிருக்கிறது, அவர்

இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்". - 2 கொரி. 5: 17-18.

அற்புதத்தின் இரண்டாம் பகுதி

அற்புதத்தின் இரண்டாவது பகுதியாக இரட்சிக்கப்பட்ட மனிதனுக்குள் தேவன் நற் கிரியைகளை நடப்பிக்கிறார். ரோமர் ஆறாம் அதிகாரத்தில் எழுதியிருக்கிற பிரகாரமாக:

"ஆகையால் என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமோ? கூடாதே. பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்? கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த் தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்து போகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே. ஆகையால் கிறிஸ்துவுடனேகூட நாம்மரித்தோமானால், அவருடனேகூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம். மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம். மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை. அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார், அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார். அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய

இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர் களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள். ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக் கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர் களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.

நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது. இதினால் என்ன? நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவஞ்செய்யலாமா? கூடாதே. மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா? முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள். உங்கள் மாம்ச பலவீனத்தினிமித்தம் மனுஷர் பேசுகிறபிரகாரமாய்ப் பேசுகிறேன். அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள். பாவத்திற்கு நீங்கள் அடிமைகளாயிருந்த காலத்தில் நீதிக்கு நீங்கினவர்களாயிருந்தீர்கள். இப்பொழுது உங்களுக்கு வெட்கமாகத் தோன்றுகிற காரியங்களினாலே அக்காலத்தில் உங்களுக்கு என்ன பலன் கிடைக்கிறது? அவைகளின் முடிவு மரணமே. இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலை யாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல்

உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்திய ஜீவன். பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்". - ரோமர் 6: 1-23.

"ஆதலால், கர்த்தருக்குள் நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது என்னவெனில், மற்றப் புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறதுபோல நீங்கள் இனி நடவாம லிருங்கள். அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து, உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களைக் காமவிகாரத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். நீங்களோ இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை. இயேசு வினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே. அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள். அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன். நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள், சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது, பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள். திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலைசெய்து, பிரயாசப்படக்கடவன். கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம், பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள். அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற

தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக் கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்". - எபே. 4: 17-32.

"கெட்ட சிந்தையுள்ளவர்களும் சத்தியமில்லாதவர்களும் தேவ பக்தியை ஆதாயத்தொழிலென்று எண்ணுகிறவர்களுமாயிருக்கிற மனுஷர்களால் உண்டாகும் மாறுபாடான தர்க்கங்களும் பிறக்கும், இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு". - 1 தீமோ. 6: 5.

"தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே". - கொலோ. 3: 10.

"துர்இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்". - ரோமர் 13: 14.

மேலே குறிப்பிட்ட இந்த அற்புதங்கள், இவற்றை வாசிக்கும் உங்களுடைய வாழ்க்கையிலும் ஏற்படலாம், ஏற்படவேண்டும். எனவே தேவ கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து பரிசுத்தம் அடையுங்கள், அப்படியல்லாமல் தேவனுடைய பரிசுத்த பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க எவராலும் முடியாது. ஆகவே இப்பொழுதே உங்களை ஆயத்தப்படுத்துங்கள். தேவன் அருளிய பரிசுத்த ஆவியானவர் ஒருவனை ஆட்கொண்டு நடத்தும்போது அவனுடைய வாழ்க்கையில் எல்லாப் பகுதியிலும் மாற்றங்கள் ஏற்படுகிறது. அவனுடைய பேச்சு, நடை, உடை, போகும் இடம், சேரும் நண்பர், பணத்தைச் செலவு செய்யும்முறை யாவற்றிலும் மாற்றமும், முன்னேற்றமும் வெளிப் படையாகக் காணக்கூடியதாய் இருக்கும். மேலும், "பழைய மனிதனை" களைந்துவிட்டு, தேவனுடைய கிருபையினால் மாமிச இச்சைகளுக்கு இடம் கொடாதபடி "புதிய மனிதனை" தரித்தவனாய், தேவன் உருவாக்கிய நீதியிலும் பரிசுத்தத்திலும் வாழ முற்படுகிறான்.

கடைசிநாட்களில் கொடிய காலங்கள்

எம்மைச் சூழ்ந்து வாழ்பவர்கள் ஒன்றில் தேவனை அறியாதவர் களாகவும் அல்லது பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டவைகளுக்கு எதிராக செயற்படுகிறவர்களாகவும் இருப்பதைக் காணலாம். உதாரணமாக அப்படிப்பட்டவர்களுடைய வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை கீழ்க்காணும் வேதப் பகுதிகளில் விபரமாக வாசித்து அறியலாம்.

"மேலும், கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியாயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர் களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமை யுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகி களாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர் களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு, பாவங்களால் நிறைந்து, பற்பல இச்சைகளால் இழுப்புண்டு, எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண் பிள்ளைகளுடைய வீடுகளில் இப்படிப்பட்டவர்கள் நுழைந்து, அவர்களை வசப்படுத்திக் கொள்ளுகிறார்கள்". - 2 தீமோ. 3: 1-7.

"அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை யென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள், வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய

வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். பூமியின் கனியைப் பட்சித்துப்போடுகிறவைகளை உங்கள் நிமித்தம் கண்டிப்பேன், அவைகள் உங்கள் நிலத்தின் பலனை அழிப்பதில்லை, வெளியிலுள்ள திராட்சக்கொடி பழமில்லாமற் போவதுமில்லை என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது எல்லா ஜாதிகளும் உங்களைப் பாக்கியவான்கள் என்பார்கள், தேசம் விரும்பப்படத்தக்கதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். நீங்கள் எனக்கு விரோதமாய்ப் பேசின பேச்சுகள் கடினமாயிருக்கிறது என்று கர்த்தர் சொல்லுகிறார், ஆனாலும் உமக்கு விரோதமாக என்னத்தைப் பேசினோம் என்கிறீர்கள். தேவனைச் சேவிப்பது விருதா, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறதினாலும், சேனைகளின் கர்த்தருக்கு முன்பாகத் துக்கித்து நடக்கிறதினாலும் என்ன பிரயோஜனம்? இப்போதும் அகங்காரிகளைப் பாக்கியவான்கள் என்கிறோம், தீமை செய்கிறவர்கள் திடப்படுகிறார்கள், அவர்கள் தேவனைப் பரிட்சைபார்த்தாலும் விடுவிக்கப்படுகிறார்களே என்று சொல்லுகிறீர்கள். அப்பொழுது கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள்: கர்த்தர் கவனித்துக் கேட்பார், கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப் புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது. என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார், ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ் செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல நான் அவர்களைக் கடாட்சிப்பேன். அப்பொழுது நீங்கள் நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும், தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ்செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத்

திரும்பவும் காண்பீர்கள்". - மல்கியா 3: 7-18.

கடவுளை அறிகிற அறிவு அவசியம்

கடவுளைப் பற்றிய அறிவில்லாமல் பரிசுத்தத்தைக் குறித்து சரிவர தெரிந்துகொள்ள முடியாது, ஏனெனில் கடவுள் பரிசுத்தராய் இருப்பதினால் அவரை அறிகிற அறிவு பரிசுத்தத்தை இலகுவாக புரிந்துகொள்ள ஏதுவாயிருக்கும். ஆகவே தேவனையும், அவருடைய மகத்துவங்களையும், மேன்மைகளையும், இயல்புகளையும் தேவத்துவத்தின் தன்மைகளையும், அவருடைய குணாதிசயங்களையும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து மேலும் பார்த்து அறிந்துகொள்வது அவசியம்.

தேவனுடைய தத்துவத்தின் தன்மைகள் (தேவத்துவம்)

Attributes of God

1. தேவனுடைய அறிவு - The Knowledge of God

தேவன் சகலத்தையும் அறிந்தவர், அவர் அறியாததென்று ஒன்றும் இல்லை, இருக்கவும் முடியாது. இருந்தது, இருக்கிறது, இருக்கப் போவது, நடந்தது, நடக்கிறது, நடக்கப்போவது போன்ற சகலத்தையும் அறிந்தவரும் தெரிந்தவருமாய் இருக்கிறார். அவர் வானத்திலும் பூமியிலும் பாதாளத்திலும் இருக்கக்கூடிய சகலத்தையும் குறித்த முழு விபரங்களையும் அறிந்தவராய் இருக்கிறார். அவர் இருளில் இருப்பதையும் அறிவார், அவர் கவனத்திற்கு இல்லாதது ஒன்றுமில்லை, அவருக்கு மறைபொருள் என்றோ, மறந்ததென்றோ ஒன்றுமில்லை. அவர் அறிவு பூரணமானது, குறைவற்றது, ஆச்சரியமானது, அளவிடமுடியாதது. அவர் தவறாதவர், மாறாதவர், அவருடைய பார்வைக்கு மறைவானது ஒன்றுமில்லை. அப்படிப்பட்ட சகலத்தையும் அறிந்த தெரிந்த தேவனை நாம் சரிவர அறியவேண்டும்.

"அவரே ஆழமும் மறைபொருளுமானதை வெளிப்படுத்துகிறவர், இருளில் இருக்கிறதை அவர் அறிவார், வெளிச்சம் அவரிடத்தில்

ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. உங்களில் சிலர் இப்படிப்பட்டவர் களாயிருந்தீர்கள், ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப் பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்". - 1 கொரி. 6: 9-11.

"மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோத மாகவும் இச்சிக்கிறது, நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது. ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல. மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன, அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே. இப்படிப்பட்டவை களைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்ப தில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்". - கலாத். 5: 17-21.

"நீங்கள் உங்கள் பிதாக்களின் நாட்கள் தொடங்கி என் கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், அவைகளைவிட்டு விலகிப் போனீர்கள், என்னிடத்திற்குத் திரும்புங்கள், அப்பொழுது உங்களிடத்திற்குத் திரும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார், நாங்கள் எந்த விஷயத்தில் திரும்பவேண்டும் என்கிறீர்கள். மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே. நீங்கள் சபிக்கப் பட்டவர்கள், ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள். என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள், அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங் கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை

தங்கும்". - தானியேல் 2: 22.

"கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர். என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர், என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர், என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும். என் நாவில் சொல் பிறவாததற்குமுன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர். முற்புறத்திலும் பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி, உமது கரத்தை என்மேல் வைக்கிறீர். இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது". - சங். 139: 1-6.

"அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை, சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்". - எபிரெயர் 4: 13.

2. தேவனுடைய மகத்துவம் - The Spremacy of God

பூமி அனைத்திலும் உள்ள தேவனுடைய மேன்மையையும் மகத்துவத்தையும் பரிசுத்த வேதாகமம் தீர்க்கமாகவும், முழுமையாகவும் தெளிவுபடுத்துகிறது. உலகத்திலுள்ள தேசத் தலைவர்களும், அரசர்களும், சமயத் தலைவர்களும் அவருக்கு முன்பாக ஒரு சிறு பூச்சிக்கும் குறைவானவர்களாகவே காணப்படுவர். அப்படிப்பட்டவர்தான் எமது மகத்துவமும் மாட்சிமையுமுள்ள தேவாதி தேவன். அவருக்கு நிகராக ஒருவரும் இல்லை.

"கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள், வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள். கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடையது, தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர். ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது, தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர், உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு, எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய

கரத்தினால் ஆகும். இப்போதும் எங்கள் தேவனே, நாங்கள் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, உமது மகிமையுள்ள நாமத்தைத் துதிக்கிறோம்". - 1 நாளாகமம் 29: 11-13.

"எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தாவே, பரலோகத்தி லிருக்கிற நீர் அல்லவோ தேவன், தேவரீர் ஜாதிகளுடைய ராஜ்யங் களையெல்லாம் ஆளுகிறவர், உம்முடைய கரத்திலே வல்லமையும் பராக்கிரமமும் இருக்கிறது, ஒருவரும் உம்மோடு எதிர்த்து நிற்கக்கூடாது". - 2 நாளா. 20: 6.

புதிய ஏற்பாட்டிலும் தேவனுடைய உன்னதமான மகத்துவத்தை உறுதிப்படுத்தி தீர்க்கமாக எழுதப்பட்டிருக்கிறது. தேவன் தமது அனாதி தீர்மானத்தின்படி, அவருடைய சித்தப்படி கிரியைகளை நடப்பிக்கிற மகத்துவமுள்ளவர் என்று வேதம் விபரிக்கிறது.

"தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே நாங்கள் முன்குறிக்கப் பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம்". - எபே. 1: 12

"கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவன் யார்? தனக்குப் பதில் கிடைக்கும் படிக்கு முந்தி அவருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்? சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது, அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்". - ரோமர் 11: 34-36.

"தேவனுடைய அந்தரங்க ஞானத்தை நீர் ஆராய்ந்து, சர்வ வல்லவருடைய சம்பூரணத்தை நீர் அறியக் கூடுமோ? அது வானபரியந்தம் உயர்ந்தது, உம்மால் என்ன ஆகும்? அது பாதாளத்திலும் ஆழமானது, நீர் அறியக் கூடியது என்ன? அதின் அளவு பூமியைப்பார்க்கிலும் நீளமும், சமுத்திரத்தைப்பார்க்கிலும் அகலமுமாயிருக்கிறது". - யோபு 11: 7-9.

3. தேவனுடைய ஆளுகை - The Soverignity of God

தேவனுடைய ஆளுகை என்பது அவருடைய உன்னதமான நீதியான செயற்பாட்டை விபரிக்கிறது. சகல படைப்புகளுக்கும் மேலாக உயர்த்தப்பட்டவர், தம்முடைய விருப்பப்படி சகலத்தையும் நடப்பிப்பவர், சுயாதீனமாக செயற்படுபவர், ஏதும் அவருடைய ஆளுகையை தடை செய்யவோ, நிறுத்தவோ முடியாது என்பதை அவருடைய வார்த்தையே விபரிக்கிறது.

"அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகாலமுதற்கொண்டும் அறிவிக்கிறேன், என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளை யெல்லாம் செய்வேன் என்று சொல்லி, உராய்ஞ்சுகிற ஒரு பட்சியைக் கிழக்கிலிருந்தும், என் ஆலோசனையை நிறைவேற்றும் மனுஷனைத் தூரதேசத்திலிருந்தும் வரவழைக்கிறவராயிருக்கிறேன், அதைச் சொன்னேன், அதை நிறைவேற்றுவேன், அதைத் திட்டம் பண்ணினேன், அதைச் செய்து முடிப்பேன்". - ஏசாயா 46: 10-11.

"பூமியின் குடிகள் எல்லாம் ஒன்றுமில்லையென்று எண்ணப்படு கிறார்கள், அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும் பூமியின் குடிகளையும் நடத்துகிறார், அவருடைய கையைத் தடுத்து, அவரை நோக்கி: என்ன செய்கிறீரென்று சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை என்றேன்". - தானியேல் 4: 35.

4. தேவனுடைய மாறாத தன்மை - The Immutability of God

என்றுமே மாறாத தேவனுடைய தன்மை அவருடைய தெய்வீக பூரணத்துவத்தை வெளிப்படுத்துகிறது. அத்தன்மையை அநேகர் சரிவர புரிந்து கொள்ளவில்லை, சகல படைப்புகளிலும் காணப்படாத, காணமுடியாத மேன்மையான ஒரு ஸ்தானத்திலே அவருடைய மாறாத நிலை அமைந்துள்ளது. தேவன் நித்தியமாகவே மாறாதவராய் இருக்கிறார், அவருடைய தேவத்துவம் எந்நிலையிலும் மாறுபடாது மாறுபடவும் மாட்டாது. மனிதன் மாறுவான், ஆனால் தேவன் மாறுவதற்கு அவர் மனிதனல்ல, எனவேதான் அவரை "கன்மலை"

என்று விபரிக்கிறோம். சமுத்திரம் மும்முரமாகக் கொந்தளித்தபோதும் அதன் நடுவிலுள்ள கற்பாறை அசைக்கப்படாதபடி இருப்பதுபோல தேவனும் அசைக்கப்படாதபடி என்றும் மாறாதவராய் இருக்கிறார்.

“அவர் கன்மலை, அவர் கிரியை உத்தமமானது, அவர் வழிகளெல்லாம் நியாயம், அவர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன், அவர் நீதியும் செம்மையுமானவர்”. - உபா. 32: 4.

“கர்த்தரைப்போலப் பரிசுத்தமுள்ளவர் இல்லை, உம்மை யல்லாமல் வேறொருவரும் இல்லை, எங்கள் தேவனைப்போல ஒரு கன்மலையும் இல்லை”. - 1 சாமு. 2: 2.

“பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல, மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல, அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?” - எபி. 23: 19.

“இஸ்ரவேலின் ஜெயபலமானவர் பொய் சொல்லுகிறதும் இல்லை, தாம் சொன்னதைப்பற்றி மனஸ்தாபப்படுகிறதும் இல்லை, மனம் மாற அவர் மனுஷன் அல்ல என்றான்”. - 1 சாமு. 15: 29.

“நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது, அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை”. யாக்கோபு 1: 17.

ஆரம்பமும் முடிவும் இல்லாத நித்திய தேவன் மாற்றத்தை தெரியாதவர் மாறவேமாட்டார். அவர் நித்திய பிதா, அவரிடத்தில் மாற்றமுமில்லை எந்தவொரு நிழலும் இல்லை. தேவன் மாறதவர் என்பது அவருடைய தெய்வீக தத்துவத்தில் முதல் இடத்தைப் பெறுகிறது. நித்தியமானவர் என்பது அவருடைய சாதாரண இயல்பு, எனவே அவர் மாறுவார் எனபதற்கு எந்தவித சந்தேகமோ சம்பந்தமோ இல்லை. அவர் இல்லை என்ற நிலையில் ஒருபொழுதும் இருந்ததில்லை, அப்படி அவர் இல்லாமல் போகிற நேரமோ, காலமோ

வரப்போகிறதுமில்லை. அவர் உருவாக்கப்பட்டவருமல்ல, அவருக்குள் வளர்ச்சி என்றும் விருத்தி என்றும் ஒன்றில்லை. இன்று அவர் எப்படி இருக்கிறாரோ அப்படியே ஏற்கனவேயும் இருந்தார், இனிமேலும் இருப்பார், வரும் காலங்களிலும் அப்படியே இருக்கப் போகிறார். “நான் கர்த்தர், நான் மாறாதவர்” என்பது அவர் வாக்கு.

“நான் கர்த்தர், நான் மாறாதவர், ஆகையால் யாக்கோபின் புத்திரராகிய நீங்கள் நிர்மூலமாகவில்லை”. - மல்கியா 3: 6.

“நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர், வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது. அவைகள் அழிந்துபோம், நீரோ நிலைத்திருப்பீர், அவைகளெல்லாம் வஸ்திரம்போல் பழமையாய்ப்போம், அவைகளை ஒரு சால்வையைப்போல் மாற்றுவீர், அப்பொழுது மாறிப்போம். நீரோ மாறாதவராயிருக்கிறீர், உமது ஆண்டுகள் முடிந்துபோவதில்லை.” - சங். 102: 25-27.

5. தேவனுடைய பரிசுத்தம் - The Holiness of God

கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்? தேவரீர் ஒருவரே பரிசுத்தர், எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்கள், உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாய் இருக்கின்றன.

தேவன் ஒருவரே தனித்துவமாகவும், நித்தியமாகவும், மாறாதவ ராகவும் இருக்கிற பரிசுத்தர். பரிசுத்த வேதாகமம் அவரை “ஒரே பரிசுத்தர்” என்பதை எப்பொழுதும் தெளிவுபடுத்துகிறது, ஏனெனில் அவருக்குள் சகலமும் திறம்பட நிறைவு பெற்றதாய் காணப்படுகிற நற்குணர். பாவ நிழல்கூட படாத தூயவர். பரிசுத்தம் அவருடைய அதி உன்னதமான தெய்வீக இயல்பு. அவருடைய பரிசுத்தத்தை மேலும் இப்படியாக பரிசுத்த வேதாகமம் விபரிக்கின்றது. “தீமையைப் பார்க்க மாட்டாத சுத்தக்கண்ணனே, அநியாயத்தை நோக்கிக்கொண்டிருக்க மாட்டீரே”. தேவன் பரிசுத்தத்தால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறார்.

“தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை, இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது”. - 1 யோவான் 1: 5.

“கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங் களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்?” - யாத். 15: 11.

“உமது சாட்சிகள் மிகவும் உண்மையுள்ளவைகள், கர்த்தாவே, பரிசுத்தமானது நித்தியநாளாக உமது ஆலயத்தின் அலங்காரமா யிருக்கிறது”. சங்கீதம் 93: 5.

6. தேவனுடைய வல்லமை - The Power of God

தேவ வல்லமை என்பது தேவ பலத்தால் அவர் எதையும் செய்யக் கூடிய தன்மையை உடையவர் என்பதை வெளிப்படுத்துகிறது. தேவன் தாம் விரும்பியதை, தமது அளவிடமுடியாத ஞானத்தைக்கொண்டு, பரிசுத்த சிந்தனைக்கு நடப்பிக்க, செயற்பட நினைக்கிறவற்றை செய்து முடிக்கக்கூடியதான ஒரு வல்லமை. பரிசுத்தம் அவருடைய அலங்காரமாய் இருக்கிற தன்மையைப்போல், அவருடைய வல்லமை சகல இயற்கையின் பரிபூரண அமைப்பிற்கும் உயிர் கொடுத்து செயற்பட வைக்கிறது. இந்த வல்லமையானது பூமியைச் சுழல வைக்கிறது, சூரியனைச் சுற்றிவர வைக்கிறது, அதைப் பிரகாசிக்க வைக்கிறது, வெப்பத்தைக் கொடுக்க வைக்கிறது, அப்படியாக சகல தெய்வீக இயற்கையின் படைப்புகளையும் இந்த வல்லமை ஆட்கொண்டு செயற்பட வைக்கிறது. தேவ வல்லமை செயற்படாத விடத்து, நித்தியமானதும் நிரந்தரமானவற்றின் ஆளுகையும் விருதாவாகிவிடும். மேலும் இந்த தெய்வீக வல்லமை இல்லையேல் தேவனுடைய இரக்கம் பெலனற்றதாயும் அவருடைய எச்சரிப்பெல்லாம் வெறும் பூச்சாண்டி விளையாட்டைப்போலும், பொம்மையாட்டமாகவும்தான் காணப்படும். தேவ வல்லமை என்பது தேவனைப்போலவே எல்லையற்ற, நித்தியமான, அளவிடமுடியாத,

வரையறுக்கப்படாத, எந்தப் படைப்புகளாலும் கட்டுப்படுத்தவோ தோற்கடிக்கவோ முடியாததொன்று.

“நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங் களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்”. - எபே. 3: 20-21.

“கர்த்தாவே, உம்முடைய வலதுகரம் பலத்தினால் மகத்துவம் சிறந்திருக்கிறது, கர்த்தாவே, உம்முடைய வலதுகரம் பகைஞனை நொறுக்கிவிட்டது.” - யாத். 15: 6.

“கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள், வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள், கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடையது, தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர். ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது, தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர், உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு, எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும்”. - 1 நாளா. 29: 11-12.

“அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்”. மத். 24: 30.

“தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக பரிசுத்தஆவி உன்மேல் வரும், உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும், ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்.” - லூக் 1: 3.

“பின்பு ஒருநாள் அவர் உபதேசித்துக் கொண்டிருக்கிறபோது கலிலேயா, யூதேயா நாடுகளிலுள்ள சகல கிராமங்களிலும், எருசலேம்

நகரத்திலுமிருந்து வந்த பரிசேயரும் நியாயசாஸ்திரிகளும் உட்கார்ந்திருந்தார்கள், அப்பொழுது பிணியாளிகளைக் குணமாக்கத் தக்கதாகக் கர்த்தருடைய வல்லமை விளங்கிற்று". - லூக். 5: 17.

வல்லமை தேவனுக்கும், தேவன் ஒருவருக்குமே உரியது. உலகத்திலே எந்த ஒரு படைப்பிற்கும் அவர் அதைக் கொடுத்தாலன்றி, ஒரு அணுவளவேனும் அசைய வைக்க அவற்றிற்கு வல்லமை இல்லை. தேவனுடைய வல்லமையை நாம் சுதந்தரித்துக்கொள்ள முடியாது. எந்தவொரு உலகப் பிரசித்தமான அதிகாரமோ அதை அடைய இயலாது, அது அவருக்கே சொந்தமான சொத்து.

"தேவன் ஒருதரம் விளம்பினார், இரண்டுதரம் கேட்டிருக்கிறேன், வல்லமை தேவனுடையது என்பதே". - சங். 62: 11.

6. தேவனுடைய உண்மை - The faithfulness of God

தேவன் உண்மையுள்ளவர் என்பது அவருடைய தேவத்துவத்தின் தன்மைக்குத் தேவையான ஒரு குணாதிசயம். அது அவரிடம் இல்லாவிட்டால் அவர் சர்வ வல்ல தேவனாய் இருக்க முடியாது, தேவன் உண்மையற்றவராய் இருப்பது அவருடைய இயல்பிற்கு எதிர்மாறானது, அது முடியாத ஒரு நிலைப்பாடு. நாம் உண்மை யற்றவர்களாய் இருந்தாலும் தேவன் எப்போதும் உண்மை யுள்ளவராகவே இருக்கிறார், ஏனெனில் அவர் தம்மைத்தாமே மறுதலிக்கமாட்டார். தேவன் உண்மையாய் இருப்பதென்பது தேவ நியதியின் அதி உன்னதமான பரிபூரணத்தை வெளிப்படுத்துகிறது, அதை அவர் தனது உடையாக அணிந்திருக்கிறார்.

"ஆகையால் உன் தேவனாகிய கர்த்தரே தேவன் என்றும், தம்மில் அன்புகூர்ந்து, தமது கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் ஆயிரம் தலைமுறைமட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன் என்றும்,..." - உபா. 7: 9.

"நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும், அவர் உண்மை யுள்ளவராயிருக்கிறர், அவர் தம்மைத்தாம் மறுதலிக்கமாட்டார்". - 2 தீமோத். 2: 13.

"சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைப்போல் வல்லமையுள்ள கர்த்தர் யார்? உம்முடைய உண்மை உம்மைச் சூழ்ந்திருக்கிறது". - சங். 89: 8.

"உம்முடைய நீதியை நான் என் இருதயத்திற்குள் மறைத்து வைக்கவில்லை, உமது சத்தியத்தையும் உமது இரட்சிப்பையும் சொல்லியிருக்கிறேன், உமது கிருபையையும் உமது உண்மையையும் மகா சபைக்கு அறிவியாதபடிக்கு நான் ஒளித்துவைக்கவில்லை, கர்த்தாவே நீர் உம்முடைய இரக்கங்களை எனக்குக் கிடையாமற் போகப்பண்ணாதேயும், உமது கிருபையும் உமது உண்மையும் எப்பொழுதும் என்னைக் காக்கக்கடவது". சங். 40: 10-11.

"ஆனாலும் என் கிருபையை அவனை விட்டு விலக்காமலும், என் உண்மையில் பிசகாமலும் இருப்பேன். என் உடன்படிக்கையை மீறாமலும், என் உதடுகள் விளம்பினதை மாற்றாமலும் இருப்பேன்". - சங். 89: 33-34.

"நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள், உமது உண்மை பெரிதாயிருக்கிறது". புலம்பல் 3: 22-23.

தேவனின் குணாதியங்கள்

a) தேவன் நல்லவர்

"அப்பொழுது ஒருவன் வந்து, அவரை நோக்கி; நல்ல போதகரே நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர்: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே, நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார்". மத்தேயு 19: 16-17.

"கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும், அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது". - சங். 100: 5.

"கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள், அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்". - சங். 34: 8.

b) தேவன் தயவும் கண்டிப்புமானவர்

"ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார், விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார், அந்தத்தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவு கிடைக்கும், நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டுபோவாய்". - ரோமர் 11: 22.

"இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசி பார்த்ததுண்டானால்,..." - 1 பேதுரு 2: 1.

c) பரிசுத்தரும் பூரணருமானவர்

"ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்". - மத்தேயு 5: 48.

"நீ இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்தோடும் சொல்ல வேண்டியது என்னவென்றால்: உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்". - லேவி. 19: 2.

d) நீதியும் நியாயமும் உள்ளவர்

"அப்பொழுது தண்ணீர்களின் தூதன் இருக்கிறவரும் இருந்தவரும் பரிசுத்தருமாகிய தேவரீர் இப்படி நியாயந்தீர்க்க நீதியுள்ளவராயிருக்கிறீர்". - வெளி. 16: 5.

"இவைகளுக்குப்பின்பு, பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரத்தைக் கேட்டேன். அவர்கள் அல்லேலூயா. இரட்சணியமும் மகிமையும் கனமும் வல்லமையும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது, அவருடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள். தன் வேசித்தனத்தினால் பூமியைக் கெடுத்த மகா வேசிக்கு அவர் நியாயந்தீர்ப்புக்கொடுத்து, தம்முடைய

ஊழியக்காரரின் இரத்தத்திற்காக அவளிடத்தில் பழிவாங்கினாரே என்றார்கள்". - வெளி. 19: 1-2.

"தேவன் அநியாயஞ் செய்யாமலும், சர்வவல்லவர் நீதியைப் புரட்டாமலும் இருக்கிறது மெய்யே". - யோபு 34: 12.

"மேகமும் மந்தாரமும் அவரைச் சூழ்ந்திருக்கிறது, நீதியும் நியாயமும் அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம்". - சங். 97: 2.

e) அன்பும் கருணையும் உள்ளவர்

"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்". - யோவான் 3: 16.

"நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலை தோறும் புதியவைகள், உமது உண்மை பெரியதாயிருக்கிறது". - புலம்பல் 3: 22-23.

"அன்பில்லாதவன் தேவனை அறியான், தேவன் அன்பாகவே இருக்கிறார். தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும் படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது". - 1 யோவான் 4: 8-10.

f) உண்மையும் சத்தியமுமுள்ளவர்

"கர்த்தாவே, நீரே என் தேவன் உம்மை உயர்த்தி, உமது நாமத்தைத் துதிப்பேன், நீர் அதிசயமானவைகளைச் செய்தீர், உமது பூர்வ ஆலோசனைகள் சத்தியமும் உறுதியுமானவைகள்". - ஏசா. 25: 1.

“ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது. லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர் சொல்லுகிறதாவது..” - வெளி. 3: 13-14.

“பின்பு, பரலோகம் திறந்திருக்கக் கண்டேன், இதோ, ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர், அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார்” - வெளி. 19: 11.

“அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம், வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே” - எபி. 10: 23.

g) கொடுக்கிற தேவன்

“வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப் பட்டிருக்கிறது, தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும், பிரயோஜனமுள்ள வைகளாயிருக்கிறது”. - 2 தீமோ. 3: 16-17.

“தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக் காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லா வற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?” - ரோமர் 8: 32.

“பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்”. - லூக். 11: 13.

h) மேன்மையுள்ள தேவன்

“கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்?” - யாத். 15: 11.

i) தேவன் ஞானமுள்ளவர் (சர்வ ஞானி)

“தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாயிருக்கிற தேவனுக்கு இயேசு கிறிஸ்துவின் மூலமாய் என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்” - ரோமர் 16: 27.

“கர்த்தரைப்போலப் பரிசுத்தமுள்ளவர் இல்லை, உம்மை யல்லாமல் வேறொருவரும் இல்லை, எங்கள் தேவனைப் போல ஒரு கன்மலையும் இல்லை. இனி மேட்டிமையான பேச்சைப் பேசாதிருங்கள், அகந்தையான பேச்சு உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம், கர்த்தர் ஞானமுள்ள தேவன், அவர் செய்கைகள் யதார்த்த மல்லவோ?” - 1 சாமு. 2: 3.

“அவர் இருதயத்தில் ஞானமுள்ளவர், பெலத்தில் பராக்கிரம முள்ளவர், அவருக்கு விரோதமாகத் தன்னைக் கடினப்படுத்தி வாழ்ந்தவன் யார்?” - யோபு 9: 4.

“என் நாவில் சொல் பிறவாததற்குமுன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர், முற்புறத்திலும் பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி, உமது கரத்தை என்மேல் வைக்கிறீர். இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமா யிருக்கிறது”. - சங்கீதம் 139: 4-6.

“பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாத மில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது”. - யாக். 3: 17.

j) தேவன் எங்குமிருக்கிறார் (சர்வ வியாபி)

“உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர், நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும். இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும், இரவும் பகலைப்போல வெளிச்சமாயிருக்கும், உமக்கு இருளும் வெளிச்சமும் சரி”. - சங். 139: 7-12.

“கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத் தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார், அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே. ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம், அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர், நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள்.” - அப்போ. 17: 27-28,

“நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.” - எரே. 23: 23.

k) தேவன் அனைத்து வல்லமையையும் உடையவர் (சர்வ வல்லவர்)

“ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.” - ஆதி. 1: 1.

“அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலை நிற்கிறது.” - கொலோ. 1: 17.

“ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, தேவரீர் உம்முடைய மகா பலத்தினாலும், நீட்டப்பட்ட உம்முடைய புயத்தினாலும் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர், உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை.” - எரே. 32: 17.

“இயேசு, அவர்களைப் பார்த்து: மனுஷரால் இது கூடாததுதான், தேவனாலே எல்லாம் கூடும் என்றார்”. - மத்தேயு 19: 26.

i) தேவன் நித்தியமானவர்

“அன்றியும், நாம் சத்தியமுள்ளவரை அறிந்துகொள்வதற்குத் தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறா ரென்றும் அறிவோம், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கிறோம், இவரே மெய்யான தேவனும் நித்தியஜீவனுமாயிருக்கிறார்.” - 1யோவான் 5: 20.

“ஆண்டவரே, தேவரீர் தலைமுறை தலைமுறையாக எங்களுக்கு அடைக்கலமானவர். பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்.” - சங்கீதம் 90: 1-2.

“நான் அல்பாவும் ஒமெகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்.” - வெளி. 22: 13.

“மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென், நான் மரணத்திற்கும் பாதாளத்திற்கு முரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்.” - வெளி. 1: 18.

m) தேவன் என்றும் மாறாதவர்

“நான் கர்த்தர், நான் மாறாதவர், ஆகையால் யாக்கோபின் புத்திரராகிய நீங்கள் நிர்மூலமாகவில்லை.” - மல். 3: 6.

“இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவரா யிருக்கிறார்.” எபி. 13: 8.

“நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந் துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது, அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.” - யாக். 1: 17.

பாவம் மனிதனுடைய வாழ்க்கையைப் பாதிக்கிறது

பாவம் எவ்வாறாகவும், எவ்வளவாகவும், ஒவ்வொரு மனிதனையும் அவனுடைய வாழ்க்கையையும் பாதிக்கிறது என்பதை நாம் தெரிந்து அதன்படி நமது வாழ்க்கையைச் சீர்படுத்தி வாழ்வது மிகவும் அவசியம்.

1. பாவம் தேவனிடமிருந்து நம்மைப் பிரிக்கிறது

"உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப்பிரிவினை உண்டாக்குகிறது, உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது. ஏனென்றால், உங்கள் கைகள் இரத்தத்தாலும், உங்கள் விரல்கள் அக்கிரமத்தாலும் கறைப் பட்டிருக்கிறது. உங்கள் உதடுகள் பொய்யைப் பேசி, உங்கள் நாவு நியாயக்கேட்டை வசனிக்கிறது. நீதியைத் தேடுகிறவனுமில்லை, சத்தியத்தின்படி வழக்காடுகிறவனுமில்லை, மாயையை நம்பி, அபத்தமானதைப் பேசுகிறார்கள், தீமையைக் கர்ப்பந்தரித்து, அக்கிரமத்தைப் பெறுகிறார்கள்." - ஏசாயா 59: 2-4.

2. பாவம் நமக்கு குற்ற உணர்வை உண்டாக்குகிறது

"என் அக்கிரமங்கள் என் தலைக்கு மேலாகப் பெருகிற்று, அவைகள் பாரச்சுமையைப்போல என்னால் தாங்கக்கூடாத பாரமாயிற்று. என் மதிகேட்டினிமித்தம் என் புண்கள் அழுகி நாற்றமெடுத்தது. நான் வேதனைப்பட்டு ஒடுங்கினேன், நாள்முழுதும் துக்கப்பட்டுத் திரிகிறேன். என் குடல்கள் எரிபந்தமாய் எரிகிறது, என் மாம்சத்தில் ஆரோக்கியம் இல்லை. நான் பெலனற்றுப்போய், மிகவும் நொறுக்கப்பட்டேன், என் இருதயத்தின் கொந்தளிப்பினால் கதறுகிறேன். ஆண்டவரே, என் ஏக்கங்களெல்லாம் உமக்கு முன்பாக இருக்கிறது, என் தவிப்பு உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் உள்ளம் குழம்பி அலைகிறது, என் பெலன் என்னை விட்டு விலகி, என் கண்களின் ஒளி முதலாய் இல்லாமற்போயிற்று." - சங். 38: 4-10.

3. பாவம் சாத்தான் நம்மைக் குற்றம்சாட்ட இடம் கொடுக்கிறது

"...இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ் சாட்டுகிறவன் தாழத்தள்ளப்பட்டுப் போனான்" - வெளி. 12: 10.

4. பாவம் மரண தண்டனையை எதிர்பார்க்கிறது

"... பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்." - எசேக். 18: 4.

"பாவத்தின் சம்பளம் மரணம், ..." - ரோமர் 6: 23.

"எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி,..." - ரோமர் 3: 23.

பாவத்தின் பிடியிலிருந்து விடுதலை வேண்டும்

பாவத்தின் விளைவுகளை அறிந்த நாம் அதிலிருந்து விடுதலை பெற நம்மாலான சகல முயற்சிகளையும் எடுத்து, ஒரு பரிசுத்த வாழ்க்கை வாழ முற்படுவோம்.

மனிதனுக்கு வேண்டிய உண்மை

தேவனுடைய உண்மைக்குமுன் நாம் எம்மாத்திரம்? அவருடைய உண்மைக்கும் உத்தமத்திற்கும் பாத்திரராக வேண்டுமாயின் அவர் எமது பாவங்களைப் போக்க எமக்காக இவ்வுலகிற்கு அனுப்பிய தேவ குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை எமது சொந்த இரட்சகராக ஏற்று வாழ்வதன்மூலம், அவருடைய கிருபையால் அவருடைய உண்மைக்குள் நாமும் பிரவேசிக்க அவர் அனுகூலம் செய்வார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எமக்கு வாக்குத்தத்தம் பண்ணிய தேற்றரவாளரான பரிசுத்த ஆவியானவர் எமக்கும் வரும்போது அவர் எம்மை சகல சத்தியத்திலும் வழிநடத்துவார்.

"என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்." - யோவான் 14: 26.

"நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன், நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும், நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார், நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்." - யோவான் 16: 7-8.

பிரித்தெடுக்கப்பட வேண்டும்

பரிசுத்த ஆவியானவர்மூலம் நாம் நீதிமான்களாகிறோம். மேலும் தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் பரிசுத்தமாக்கப்பட்ட நிலையில், பிரித்தெடுக்கப்பட்ட ஒரு வாழ்க்கை வாழவேண்டும். நாம் இவ்வுலகத்தில் வாழ்ந்தாலும், இவ்வுலகத்தாரல்லாத பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கைக்கு அழைக்கப்பட்டும், நியமிக்கப்பட்டுமிருக்கிறோம்.

"நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும், நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது." - யோவான் 15: 19.

"நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன், நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல, ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது, நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக் கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன். நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல." - யோவான் 17: 14-16.

"நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்தஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்."

- 1 கொரி. 2: 12-13.

"விபசாரரே, விபசாரிகளே, உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான். நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறாரென்று வேதவாக்கியம் வீணாய்ச் சொல்லுகிறதென்று நினைக்கிறீர்களா?" - யாக். 4: 4-5.

தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்டிருக்கும் இருதயத்தையே தேவன் ஒவ்வொரு கிறிஸ்தவனிடத்திலும் எதிர்பார்க்கிறார். அவிசுவாசிகளோடு ஒரே நுகத்தில் பிணைக்கப்படாமலும், உலகத்திலுள்ளவைகளில் அன்புகூராமலும், பாவமில்லாத பரிசுத்த ஜீவியத்திலும், தேவ கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்து வாழ்கிற வாழ்க்கையையும் தேவன் நம்மிடம் காணபட விரும்புகிறார்.

"அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக, நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே. ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வ வல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்." - 2 கொரி. 6: 14-18.

"உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள், ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின்

இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவை களெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தி னாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம், தேவனுடை சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்." - 1 யோவான் 2: 15-17.

பரிசுத்தம் என்றால் என்னத்தைக் கருதுகிறோம்?

1. தேவனையும் தேவனோடு சம்பந்தப்பட்டவற்றையும் கருத்தில் கொள்கிறோம்.
2. தேவனுடைய சேவைக்கென்று பிரித்தெடுக்கப்பட்ட காரியங்களை நினைவுபடுத்துகிறோம்.
3. புனிதத்தையும், ஆன்மீகத்தையும், சுத்தத்தையும், தாழ்மையையும், இன்னும் அர்ப்பணிப்பு போன்றவற்றை சிந்திக்க வைக்கிறது.
4. ஒப்புக்கொடுத்தல், பிரதிஸ்டைபண்ணுதல், வணக்கத்துக் குரியவை என்பனவற்றை தெரிவிக்கிறது.

மேலே காணப்படும் விளக்கங்கள் பரிசுத்தத்தை நாம் எப்படி விளங்கிக் கொள்கிறோம், கருதுகிறோம் என்பதை உணர்த்துகிறது. இந்த அடிப்படையில் தேவனுடைய பரிசுத்த ஜனம், பிரத்தியேக மானவர்களும், வித்தியாசமுள்ள அடையாளத்தை உடையவர்கள் என்பது புலனாகிறது. மேலும் அவர்கள் தேவனுக்குப் பிரியமில்லாத வற்றிலிருந்து தம்மை தூரமாக்கி நடப்பதுடன், தேவன் வெறுக்கும் காரியங்களை தவிர்த்துக்கொண்டு செயற்படுவது பரிசுத்தத்திற்கு தேவையான அம்சங்களாகவும் அமைகிறது.

"எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள். சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக." - 1 தெசலோ. 5: 21-23.

"முன்னே நீங்கள் தேனுடைய ஜனங்களாயிருக்கவில்லை.

இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள், முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள். பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர் செய்கிற மாம்சஇச்சைகளை விட்டு விலகி, புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்." - 1 பேதுரு 2: 10-12.

"பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்." - எபிரெயர் 7: 26.

நான் பரிசுத்தன் என்று எப்படித் தெரியும்?

நான் பரிசுத்தனா இல்லையா என்பதற்கு நம்மை நாமே நியாயம் தீர்க்க வேண்டும். எமது இருதயத்தை நாம் ஆராய்ந்து பார்த்து, நாம் எந்தவிதத்திலும் குற்றவாளிகளல்ல என்பதை தீர்க்கக்கூடியதாய் இருப்பது அவசியம்.

"நம்முடைய இருதயமே நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்குமானால், தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார். பிரியமானவர்களே, நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியங்கொண்டிருந்து, அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம்." - 1 யோவான் 3: 20-22.

துரதிஷ்டவசமாய் அநேகர் தம்மை சரிவர நியாயம் தீர்ப்பதில்லை. ஏனெனில் ஒருவர் தனது தப்பிதங்களை, அவை தப்பானவை என்று சரிவர புரிந்துகொள்ளாத பட்சத்தில் அவர் தான் சுத்தமானவர் என்ற உணர்வோடு நடப்பது கவலைக்குரியதாகும். தான் செய்வது பிழை என்பதை உணராதவர், குற்ற உணர்வு இல்லாதவராய் நடந்து கொணடாலும் நீதிக்கு முன்னிலையில் அவர் குற்றவாளியே. எனவே நாம் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிற்பதற்கு எச்சரிப்பாகவும், கவனமாகவும் இருக்கவேண்டும். "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயம் தீர்க்கப்படோம்". - 1 கொரி. 11: 31.

"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு." - 2 தீமோ. 2: 15.

A. பரிசுத்தத்திற்கான வழி

எம்மைப் படைத்தவராகிய மாபெரும் தேவன் சிலுவையில் தமது குமாரனுடைய மரணத்தின்மூலம், ஒவ்வொருவருடைய பாவம், பாடுகள் மற்றும் வேதனைகள், துக்கங்கள் யாவற்றையும் நீக்க உன்னதமான ஒரு நடவடிக்கையை எடுத்தார். சகலருடைய பாவங் களையும் போக்க தமது குமாரனாகிய இயேசு சிலுவையில் மரித்ததின் நிமித்தம் அந்த மாபெரும் திட்டத்தை செய்து முடித்தார்.

"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே." - ரோமர் 5: 8.

"மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார், நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய

அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார், நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது, அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம், கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்." - ஏசா. 53: 4-6.

"நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார், அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்." - 1 பேதுரு 2: 24.

B. சிலுவையின்மூலம் தேவனோடு புதிய உறவு

தேவன் பரிசுத்தராகவும், நீதியுள்ளவராகவும் இருக்கிறபடியால், பாவம் எம்மை அவரிடமிருந்து பிரிக்கிறது. பாவத்தில் வாழ்பவன் எவனும் அவருடைய பரிசுத்த பிரசன்னத்தில் வர முடியாது. எனவே இயேசு சிலுவையில் மரித்ததின் மூலம், நமக்குப் பதிலாக நமது பாவங்களுக்கான தண்டனையை தாமே ஏற்றுப் பாடுபட்டதோடு மட்டுமின்றி, பரிசுத்த தேவாதி தேவனை நாம் தனிப்பட்ட முறையில் அறிந்து, அவரோடு உறவுகொள்வதன்மூலம் உண்மையான சந்தோஷ சமாதானத்தையும், அவருடைய பேரன்பையும் அனுபவிக்கும்படியான வாய்ப்பையும் நமக்கு ஏற்படுத்தித் தந்துள்ளார்.

"நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்." - 2 கொரி. 5: 21.

"இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம். (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது." - கொலோ. 1: 13-14.

"என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு

இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன், ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே, நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்." - 1 யோவான் 2: 1-2.

"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்." - யோவான் 1: 12-13.

"முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள். எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்." - எபே. 2: 13-16.

C. சிலுவையின்மூலம் விடுதலை

இயேசுவின் சிலுவை மரணம் மனித சமுதாயத்திற்கு ஒரு பெரிய வெற்றியாக நமக்கு விடுதலையைப் பெற்றுத் தந்திருக்கிறது. தேவன் நமது பாவங்களுக்காக எடுத்த நடவடிக்கை நமது பாவங்களைப் போக்கிறது மட்டுமல்லாமல், பாவத்தின் காரணமாக உருவாகும் துன்பம் மற்றும் வேதனைகளையும் போக்கக்கூடியதாய் அமையும் நடவடிக்கையுமாகும். மேலும் இயேசுவின் மரணம் பின் வரும்

பலதரமான விடுதலைகளையும் பெற்றுத் தருகிறது :

- **சாத்தானிடமிருந்து விடுதலை**
- **கடந்தகாலப் பாவங்களிலிருந்து விடுதலை**
- **நிகழ்காலப் பாவங்களிலிருந்து விடுதலை**
- **வியாதியிலிருந்து விடுதலை**
- **சாபத்திலிருந்து விடுதலை**
- **நியாயத்தீர்ப்பிலிருந்து விடுதலை**
- **நித்திய மரணத்திலிருந்து விடுதலை**

"துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்" - கொலோ. 2: 15.

"ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்." - யோவான்: 8: 36.

"நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது." - ரோமர் 6: 14.

"அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது." - மத். 8: 17.

"மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்." - கலா. 3: 13.

"அப்படியிருந்ததானால், உலகமுண்டானது முதற்கொண்டு அவர் அநேகந்தரம் பாடுபட வேண்டியதாயிருக்குமே, அப்படியல்ல, அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை

நீக்கும்பொருட்டாக இந்தக் கடைசிகாலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார். அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நிமிக்கப்பட்டிருக்கிறபடியே, கிறிஸ்துவும் அநேகருடைய பாவங் களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்." - எபி. 9: 26-27.

D. அன்பும் நீதியும் சிலுவையில் வெளிப்பட்டது

தேவ குமாரனாகிய இயேசு எமது பாவங்களுக்காக தாமே நமக்குப் பதிலாக சிலுவையிலே மரித்ததினால் தேவனுடைய அன்பும் அவருடைய நீதியான நியாயத்தீர்ப்பும் வெளிப்பட்டன. பாவத்திற்குத் தண்டனையாக அவருடைய நீதி இரத்தம் சிந்துதலை எதிர்பார்க்கிறது, அவரது அன்பே அவரது இந்த எதிர்பார்ப்பை தமது குமாரன் இரத்தம் சிந்திய மரணத்திற்கூடாக நடப்பித்துக் காண்பித்தது.

"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப் படுவதற்காகவே அவரை அனுப்பினார்." - யோவான் 3: 16-17.

"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. நாம் தேவனுக்குச் சத்துருக் களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம்

அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. அதுவுமல்லாமல், இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப் பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் நாம் தேவனைப்பற்றியும் மேன்மைபாராட்டுகிறோம்." - ரோமர் 5: 8-11.

E. சிலுவை உலக வரலாற்றின் மையமாக இருக்கிறது

இயேசு கிறிஸ்துவின் கல்வாரி சிலுவை மரணம், இந்த உலகில் மனுக்குல ஜீவியத்தின் மைய அம்சமாக அமைந்திருக்கிறது. முதல் மனுஷன், மனுஷி ஆகிய ஆதாம் ஏவாள் பாவம் செய்த அந்தக் கணத்திலிருந்தே, இயேசு சிலுவையில் மரிக்க வேண்டுமென்பது தேவனால் திட்டமிடப்பட்டிருந்தது. இதைக்குறித்து ஆதியாகமம் மூன்றாம் அதிகாரத்தில் குறிப்பிட்டு எழுதியிருப்பதை நாம் கவனிக்கக் கூடியதாய் இருக்கிறது.

தேவன் தாம் வாக்குப்பண்ணியதை, மனிதர் மீட்படையும்படி சிலுவையில் செய்து முடிப்பார் என்று அந்த நாள்முதலே மனுக்குலம் விசுவாசத்தோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. இன்று நாம் எமக்குமுன் நடந்தவற்றை திரும்பிப் பார்த்து, சிலுவையில் இயேசு நமக்காகச் செய்து முடித்ததை விசுவாசித்து, பாவ மன்னிப்பையும், புது வாழ்வையும் இலகுவாகவும், இலவசமாகவும் பெற்றுக்கொள்கிறோம்.

இயேசு சிந்திய இரத்தம்

கல்வாரி சிலுவையில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது இரத்தத்தைச் சிந்தியதின் மூலமாகவே நாம் நமது பாவங்களிலிருந்து மன்னிப்பைப்பெற்று விடுதலை பெறுகிறோம். அதன்மூலம் தேவனுடைய பிரசன்னத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் தகுதியை அடைகிறோம்.

"நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும், இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது." - எபி. 9: 22.

"அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே

ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகரவாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்." - எபி. 13: 12.

"நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்." - வெளி. 1: 6.

"குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே." - 1 பேதுரு 1: 19.

"அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம், அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்." - 1 யோவான் 1: 7-9.

A. இரத்தத்தில் உயிர் இருக்கிறது

ஒரு மனிதன் பாவம் செய்யும்போது மரணத்தைச் சம்பாதித்துக் கொள்கிறான். "***பாவத்தின் சம்பளம் மரணம்***" இயேசு நமக்குப்பதிலாக, நமது இடத்தில் சிலுவையில் தமது இரத்தத்தை சிந்தி மரித்ததின் மூலம் எமக்கு வரவேண்டிய தண்டனையைச் செலுத்தித் தீர்த்திருக்கிறார். பாவ நிவாரண பலியாக, நமது பாவ நிவிர்த்திக்காக, சிலுவையில் இயேசு இரத்தம் சிந்தி தமது ஜீவனை விட்டார். இதன் நிமித்தம் நாம் ஆண்டவரோடு ஒன்றுபட முடிந்தது. நாம் இனிமேலும் தேவனுக்கு விரோதியாய் இராமல் அவரது நண்பராகவும், அவரது குமாரர், குமாரத்திகளாகவும் இருப்போம் என்பதை அவரது இரத்தம் உறுதிப்படுத்துகிறது. விசுவாசத்தின் மூலம் இயேசு நமக்காக

சிலுவையில் செய்து முடித்ததை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

"மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது, நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன், ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே." - லேவி. 17: 11.

"அதெப்படியெனில், காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும், தீட்டுப்பட்டவர்கள்மேல் தெளிக்கப்பட்ட கடாரியின் சாம்பலும், சரீரசுத்தியுண்டாகும்படி பரிசுத்தப்படுத்துமானால், நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!" - எபி. 9: 13-14.

B. இந்த இரத்தம் தேவனுக்கானது

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தேவனுடைய நியாயப்பிரமாணத்தை முற்றிலும் திருப்திப்படுத்துகிறது. நியாயப் பிரமாணத்தை மீறினால் தண்டனை அடையவேண்டும் என்பது அதன் நியதி, அந்தத் தண்டனையிலிருந்து (மரணத்திலிருந்து) இந்த இரத்தம் நம்மைப் பாதுகாக்கிறது.

"பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான், நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்." - 1 யோவான் 3: 4.

இஸ்ரவேல் மக்கள் தமது அனைத்து முதற்பிறப்பையும் கொலை செய்ய வருபவரிடமிருந்து காப்பாற்றிக்கொள்ள, ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை தமது வீட்டு வாசல் நிலைக் கால்களில் பூசி வைக்க வேண்டுமென்று தேவன் அவர்களுக்கு முன்கூட்டியே எச்சரித்துக் கட்டளையிடுவதை யாத்திராகமம் 12ம் அதிகாரத்தில் பார்க்கிறோம். பின் வரவிருக்கும் ஆட்டுக்குட்டியானவராகிய இயேசுவுக்கு இந்த ஆட்டுக்குட்டியின் இரத்தம் முன்னடையாளமாக இருக்கிறது.

“அந்த ராத்திரியிலே நான் எகிப்து தேசம் எங்கும் கடந்துபோய், எகிப்து தேசத்திலுள்ள மனிதர்முதல் மிருகஜீவன்கள்மட்டும், முதற்பேறாயிருக்கிறவைகளையெல்லாம் அதம்பண்ணி, எகிப்து தேவர்களின்மேல் நீதியைச் செலுத்துவேன், நானே கர்த்தர். நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்காக அடையாளமாய் இருக்கும், அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்து போவேன், நான் எகிப்து தேசத்தை அழிக்கும்போது, அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்.” - யாத். 12: 12-13.

“நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.” - ரோமர் 5: 8-9.

“அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.” - எபே. 1:7.

இந்த இரத்தம் மனிதனுக்காகவே

- **இந்த இரத்தம் குறை உணர்விலிருந்து நம்மை விடுவிக்கிறது.**
- **இரத்தம் நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறது**
- **இரத்தம் நம்மை ஆண்டவரிடம் கிட்டிச் சேர்க்கிறது**
- **இரத்தம் ஆண்டவருடைய பிரசன்னத்தைச் சென்றடையும் மனத்துணிவை நமக்கு தருகிறது**
- **இந்த இரத்தம் தேவனுடைய பார்வையில் நம்மைப் பூரணப்படுத்துகிறது.**

“நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத்

தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!” - எபி. 9: 14.

“அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகரவாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்.” - எபி. 1: 12.

“அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று. முன்னே அந்நியராயும் துர்க்கிரியை களினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்.”-கொலோ. 1: 20-21.

“ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணின படியால், அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர் களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்.” - எபி. 10: 19-22.

“ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்.” - எபி. 10: 14.

மனிதனுடைய பாவங்களுக்காக இயேசு சிந்திய இரத்தம் மனிதனுடைய குற்ற உணர்விலிருந்து விடுதலை தருவதோடு நம்மைப் பரிசுத்தப்படுத்தி தேவனண்டை கிட்டிச்சேர்க்கிறது. மேலும் ஆண்டவருடைய பிரசன்னத்தைச் சென்றடையும் மனத்துணிவை நமக்குக் கொடுத்து, தேவனுடைய பார்வையில் நம்மைப் பூரணப்படுத்துகிறது.

D. இந்த இரத்தம் பிசாசானவனை எதிர்த்து நிற்கிறது

இந்த கடைசி நாட்களில் பிசாசானவன் தேவனுடைய பிள்ளைகளுக்கு எதிராக சகோதரரைக் குற்றஞ்சாட்டுவதே அவனுடைய முக்கிய கிரியையாக இருக்கிறது. கிறிஸ்து தனக்காகச் சிந்திய இரத்தத்தின் கிரியையை ஏற்றுக்கொண்ட எவருக்கும் எதிராக குற்றஞ்சாட்ட பிசாசானவனுக்கு எந்தவித ஆதாரமுமில்லை. ஆண்டவர் தமது சொந்த இரத்தத்தினால், பிரதான ஆசாரியன் எனும் தமது சிறப்பான ஊழியத்தின்மூலம் அவனை எதிர்த்து நிற்கிறார்.

"அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது, இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப் போனான்." - வெளி. 12: 10.

"கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டி சம்பந்தமான கூடாரத்தின வழியாக அல்ல, பெரிதும் உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்." - எபி. 9: 11-12.

"இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? தேவன் தெரிந்துகொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான் களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர், அவரே எழுந்துமிருக்கிறவர், அவரே தேவனுடைய வலது பாரிசத்திலும் இருக்கிறவர், நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே." - ரோமர் 8: 31-34.

E. கிறிஸ்துவின் இரத்தம் எமக்கு அளிப்பவை

- **இருதயத்தில் பரிசுத்தம்**
- **நித்திய ஜீவன்**
- **தேவனை அணுகும் சிலாக்கியம்**

"அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம், அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்." - 1 யோவான் 1: 7.

"அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷ குமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு, நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன். என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது. என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப்

பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன்." - யோவான் 6: 53-56.

பரிசுத்தம் அடைவதற்கான வழி

மனந்திரும்புதல்

மனிதன் தேவனண்டை கிட்டிச்சேர பரிசுத்தம் வேண்டும் என்பதையும், அந்த பரிசுத்தத்தை ஆண்டவராகிய இயேசு மூலமாகவே அடைய முடியும் என்பதையும், அதற்கான சகல நியமங்களையும் இயேசுதாமே கல்வாரி சிலுவையிலே நமக்காக இரத்தம் சிந்தி மரித்ததின் மூலம் செய்து முடித்துவிட்டார் என்பதையும், வேத வசனங்களுக்கூடாக மேலே வாசித்த பகுதிகளிலிருந்து அறிந்து கற்றுக்கொண்டவர்கள் அந்தப் பரிசுத்தத்தை பெறுவதற்கான நடை முறைகளை மேலும் பரிசுத்த வேதாகமத்திற்கூடாக தெரிந்து கொள்ள வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவன் நமக்கு அருளும் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வதற்கான முதற்படி, **மனந்திரும்புதல்.**

"ஆகையால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான். இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்னசெய்ய வேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி **நீங்கள் மனந்திரும்பி**, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்." - அப். 2: 36-38.

"அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார், இப்பொழுதோ **மனந்திரும்பவேண்டுமென்று** எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்." - அப்.17: 30.

நமது பாவத்தைக் குறித்த குற்ற உணர்வைப் பெறுவது,

மனந்திரும்புதலுக்கு முன்னர் நிகழ்வதாகும், ஆனால் அது மனந்திரும்புதல் அல்ல. முதலில் தங்கள் பாவத்தைப் பற்றிய குற்ற உணர்வைப் பெறாமல் எவரும் மனந்திரும்ப முடியாது, அதேவேளை குற்ற உணர்வைப் பெறும் எல்லோருமே மனந்திரும்புவது கிடையாது. ஒரு சிலரே உண்மையில் மனந்திரும்புகிறார்கள். சிலர் தங்கள் பாவத்தின் பின்விளைவுகளைக் குறித்து அல்லது பாவத்தில் பிடிபட்டு விட்டதைக் குறித்து வருத்தப்படுகிறார்களேயன்றி தாங்கள் செய்தது தவறு என்பதற்காக மனம் வருந்தவில்லை. மேலும் பிடிபட்டதினால் கிடைக்கப்போகும் தண்டனையைக் குறித்தே வருத்தப்படுகிறார்கள்.

"தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது. லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது." - 2 கொரி. 7: 10.

அநேகர் நல்ல மனிதராக மாறுவதற்கும், தங்கள் வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்வதற்கும் தங்கள் சொந்த பலத்திலும், சுய முயற்சியிலும் தங்கியிருக்கிறார்கள். இந்த சுய முயற்சிக்கு அடிப்படைக் காரணம் சுயநீதியே, இந்தச் சுயநீதி பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டியதின் அவசியத்தை ஏற்றுக்கொள்வதில்லை.

"நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம், எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது, நாங்கள் அனைவரும் இலைகளைப்போல் உதிருகிறோம், எங்கள் அக்கிரமங்கள் காற்றைப்போல் எங்களை அடித்துக்கொண்டு போகிறது." - ஏசா. 64: 6.

பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள பரிசேயர்கள், தங்கள் நடத்தைகளிலும், செயற்பாடுகளிலும் சமய உணர்வுள்ளவர்களாக உபவாசம், ஜெபம், வழிபாட்டுச் சடங்குகள், பாரம்பரிய சம்பிரதாயங்கள போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து நடந்தார்கள், ஆனால் மனந்திரும்பவில்லை. இன்னும் அநேகர் அப்படியே பாரம்பரிய பரம்பரை பழக்க வழக்கங்களுக்கு முதலிடம் கொடுத்து நடப்பதை நாம்

காணலாம். சத்தியத்தை அறிந்தும் அதன்படி நடக்க அவர்களுடைய சம்பிரதாய வழிபாடு இடம் கொடுப்பதில்லை.

“பரிசேயரிலும் சதுசேயரிலும் அநேகர் தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படி வருகிறதை அவன் கண்டு: விரியன் பாம்புக் குட்டிகளே! வருங்கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ள உங்களுக்கு வகைகாட்டினவன் யார்? மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்.” - மத். 3: 7-8.

“வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.” - மத். 5: 20.

மெய்யான மனந்திரும்புதல்

மெய்யான மனந்திரும்புதல் என்பது ஒருவர் தன் பாவத்தைக் குறித்து தனக்குள்தானே மனம் வருந்துவதோ, அல்லது மற்றவரிடம் அதைப் பகிர்ந்து வருத்தப்படுவதோ அல்ல, முதலாவதாகவும் முக்கியமாகவும் செய்யவேண்டியது, தேவனை நோக்கி ஆழமான இருதயத்திலிருந்து முழு மனஸ்தாபத்தோடு மெய்யான வருத்தத்தை தெரிவிப்பதாகும். அத்தோடு பாவத்தை வெறுத்து, பாவத்திலிருந்து திரும்பி, சத்தியத்தின்படி நடக்க தீர்மானம் எடுக்கவேண்டும்.

“தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்தி கரியும். என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும். என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன், என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன், நீர் பேசும்போது உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயந்தீர்க்கும்போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன்.” - சங். 51: 1-4.

“நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன், என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன், தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்.”-சங்.32 :5.

“நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக் கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.” - 1 யோவான் 1: 8-9.

“தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான், அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.” - நீதி. 28: 13.

மனந்திரும்புதலுக்காகச் செய்ய வேண்டியவை

1. பாவத்திலிருந்து திரும்புதல்

“உங்கள் பிதாக்களைப்போலிராதேயுங்கள், முந்தின தீர்க்கதரிசிகள் அவர்களை நோக்கி: உங்கள் பொல்லாத வழிகளையும் உங்கள் பொல்லாத கிரியைகளையும் விட்டுத் திரும்புங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்று கூப்பிட்டார்கள், ஆனாலும் எனக்குச் செவிகொடாமலும் என்னைக் கவனியாமலும் போனார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.” - சகரி. 1:4.

“விபசாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக் காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே.” - எபே. 5: 5.

2. உலகத்தைவிட்டுத் திரும்புங்கள்

“உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள், ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவை களெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள்

உலகத்தினாலுண்டானவைகள்." - 1 யோவான் 2: 15-16.

"விபசாரரே, விபசாரிகளே, உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்." - யாக். 4: 4.

3. சுயவிருப்பங்களிலிருந்து திரும்புதல்

"பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்." -1கொரி. 5: 15.

"யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்." - லூக். 14: 26.

4. பிசாசானவனிடமிருந்து திரும்புதல்

"அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவ மன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சத்தானுடைய அதிகாரத்தைவிட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படியாக நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார்." - அப். 26: 18.

5. தேவனை நோக்கித் திரும்புதல்

"ஆகையால் நீ அவர்களை நோக்கி: சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்: என்னிடத்தில் திரும்புங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது நான் உங்களிடத்துக்குத் திரும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர்

சொல்லுகிறார்." - சகரியா 1: 3.

"உன் மீறுதல்களை மேகத்தைப்போலவும், உன் பாவங்களைக் கார்மேகத்தைப்போலவும் அகற்றிவிட்டேன், என்னிடத்தில் திரும்பு, உன்னை நான் மீட்டுக்கொண்டேன்" - ஏசா. 44: 22.

6. நீதியான வாழ்க்கைக்குத் திரும்புதல்

"நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள்." - ரோமர் 6: 13.

"சிதறுண்ட ஆடுகளைப் போலிருந்தீர்கள், இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப் பட்டிருக்கிறீர்கள்." 1 பேதுரு 2: 25.

விசுவாசம்

ஒருவர் தன் பாவத்தைக் குறித்து உணர்ந்து அதற்காக மனஸ்தாப்பட்டு, மனந்திரும்பி அதற்கான பாவமன்னிப்பைப் பெறுவதற்கு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தனது பாவங்களைத் அவரிடம் அறிக்கையிடும்போது பாவக்கட்டிலிருந்து விடுதலை பெறுகிறார். இந்த தேவமன்னிப்பைப் பெறுவதற்கு அவர், இயேசு கிறிஸ்து தேவ குமாரன் என்பதையும், அவர் சகல மனித சமுதாயத்தின் பாவங் களையும் சிலுவையில் சுமந்து தீர்த்தார் என்பதையும், கல்வாரி சிலுவையிலே இரத்தம் சிந்தி மரித்து, மூன்றாம் நாள் உயிர்த் தெழுந்தார் என்பதையும், இப்பொழுதும் பரலோக இராஜ்யத்தில் தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருந்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுபவராக இருக்கிறார் என்பதையும் விசுவாசிக்க வேண்டும். **விசுவாசம்** இல்லாமல் எவரும் இந்த விடுதலையை பெற முடியாது.

விசுவாசம் என்றால் என்ன?

“விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.” எபிரெயர் 11: 1.

விசுவாசம் என்பது தேவனை முற்றும் முழுவதுமாக, அவரையும் அவர் வார்த்தைகளையும், அவர் செயற்பாடுகளையும் எந்தவித ஐயப்பாடும் இல்லாமல் நம்பி, அவரைச் சார்ந்திருப்பதாகும். விசுவாசம் என்ற வழியின்மூலமாக நாம் தேவனோடுள்ள உறவுக்குள் நுழைகிறோம். மேலும் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து செயல்படுவதின்மூலம் எமது விசுவாசத்தை உறுதிப்படுத்தி, நமது குறுகிய அறிவை சார்ந்திருப்பதை விட்டுவிட்டு அவரது எல்லையற்ற அறிவின் பொக்கிஷத்திலிருந்து அறிவைப் பெற்று அவர் நடத்துதலோடு ஜீவிக்கிற ஜீவியமாகும்.

தேவன் நமக்கு விசுவாசத்தை அளிக்கிறார்

தேவன் அருளும் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். இந்த விசுவாசத்தை தேவன் ஓர் ஈவாக நமக்குத் தருகிறார்.

“விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப் படுகிறது.” ரோமர் 1: 17.

“கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு.” எபே. 2:8.

“ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.” ரோமர் 10: 17.

“அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்.” யாக். 2: 17.

“தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும், நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.” 1 யோ. 5: 4.

விசுவாசத்தினால் இரட்சிப்பு

ஒருவன் தனது பாவங்களுக்காக மனம் வருந்தி, மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பி பாவங்களைப் போக்க இயேசுவை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்வதற்கு, அவர் தேவகுமாரன் என்பதை தன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று தன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப் படுவான். ஆகையால் விசுவாசம் ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் மிகவும் முக்கியமாகவும், அவசியமாகவும் விளங்குகிறது.

“இந்த வார்த்தை உனக்கு சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது, இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே. என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைப் பண்ணப்படும். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது. யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமேயில்லை, எல்லாருக்கும் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார். ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்.” - ரோமர் 10: 8-13.

கிருபை

கிருபை என்பது தேவன் தம்முடைய தயவிலும், மனதுருக்கத்திலும் நிறைந்தவராய், தமது இரக்கத்தின் ஐசுவரியத்தின்நிமித்தம் தகுதியற்ற நிலையில் இருக்கும் எமக்கு அளிக்கும் சிலாக்கியம். நாம் பாவிகளாக நியாயத்தீர்ப்புக்குப் பாத்திரராக இருந்தபோதிலும், தேவன் அவரது பேரன்போடு நம்மை நோக்கிப் பார்த்து, நம்மை மன்னித்தார் என்பதாகும்.

“நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், நம்மிடத்தில் அன்பு கூர்ந்து நித்திய ஆறுதலையும் நல்நம்பிக்கையையும் கிருபையாய் நமக்கு கொடுத்திருக்கிற நம்முடைய பிதாவாகிய தேவனும், உங்கள் இருதயங்களைத் தேற்றி, எல்லா நல்வசனத்திலும் நற்கிரியையிலும் உங்களை ஸ்திரப்படுத்துவாராக.” 2 தெச. 2: 16-17.

“அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சியாமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிக்காலம்முதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருள்ப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார். நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பிரசன்னமானதினாலே அந்தக் கிருபை இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டது.” - 2 தீமோ. 1: 9-10.

“அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபை பெற்றோம். ”யோவான்.1 :16.

தேவ கிருபை நம்மை ஆண்டவருடைய குடும்பத்தில் அங்கத்தவராய் ஏற்றுக்கொள்வதோடு, நாம் கிறிஸ்தவ வாழ்க்கை வாழத் தேவையான வல்லமையையும் நமக்கு அளிக்கிறது.

கிருபையினால் இரட்சிப்பு

பாவிகளாகிய நாம் நமது பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு இயேசு அண்டை அவருடைய மன்னிப்பைப்பெற விசுவாசத்தோடு வரும்போது, தேவன் தமது மாபெரும் கிருபையினால், மன்னிப்புக்கு தகுதியற்ற எம்மை மன்னிக்கிறார். அதனால் நாம் இயேசு கிறிஸ்து மூலமாய் இரட்சிப்பைப் பெற்று நித்திய ஜீவனின் நிச்சயத்தோடு வாழ ஏதுவாய் இருக்கிறது.

“கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு, ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல,..” - எபேசியர் 2: 8.

“இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்” - ரோமர் 3: 24.

“கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலே அவர்கள் இரட்சிக்கப்படுகிறது எப்படியோ, அப்படியே நாமும் இரட்சிக்கப் படுவோமென்று நம்பியிருக்கிறோமே என்றான்.” - அப். 15: 11.

“எப்படியெனில் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின.” - யோவான் 1: 17.

விசுவாசியின் வாழ்க்கையில் கிருபை

இரட்சிப்பைப் பெற்ற நாம் ஆண்டவரோடுள்ள நமது உறவில் ஒவ்வொரு நாளும் நாம் அவரோடுகூட நடக்கும்போது, எம்மை மேற்கொண்டு வீழ்த்தக்கூடிய தருணங்களைத் தொடர்ந்து சநதிக்க வேண்டி வரும். அப்பொழுது சூழ்நிலை எப்படிப்பட்டதாய் இருந்தாலும் நாம் தேவனுடைய வார்த்தையில் நம்பிக்கை வைத்து விசுவாசத்தோடு தேவனிடம் ஜெபத்திலே தைரியத்தோடு போவோமாயின், தேவன் தமது கிருபையால் எந்தச் சூழ்நிலையிலும் நாம் வெற்றிபெற வழிசெய்வார்.

“ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத் தண்டையிலே சேரக்கடவோம்.” - எபி. 4: 16.

“மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரண முடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயு மிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்.” - 2 கொரி. 9: 8.

ஞானஸ்நானம்

ஒருவர் தனது பாவத்திலிருந்து மனந்திரும்பி, இயேசு தனக்காக மரித்தார் என்பதை விசுவாசிக்கும்போது அநேக சாட்சிகளுக்கு

முன்பாக முழுக்கு ஞானஸ்நானம் எடுக்கவேண்டுமென்பது தேவ நீதி. ஆண்டவராகிய இயேசு தாமே, இந்த நீதியை யோவான் ஸ்நானகனிடம் யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்று நிறை வேற்றினார். மேலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, மரித்து உயிர்த்து பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுப் போவதற்குமுன், அவரில் விசுவாசிப்பவர்கள் அனைவரும் ஜலத்தினால் ஞானஸ்நானம் பெற வேண்டுமென்று கட்டளையிட்டார்.

"அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதி களையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,..." - மத்தேயு 28: 18-19.

"கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமை யினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்." - ரோமர் 6: 3-4.

ஞானஸ்நானம் அல்லது திருமுழுக்கு

விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். இத்திருவசனத்தின்படி ஒருவன் இரட்சிக்கப்பட கர்த்தர்மேல் விசுவாசம் வைத்தால் போதாது, ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வது அவசியம். மேலும் "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று எழுதியிருக்கிறபடி, மனந்திரும்பி பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொண்டவர்களுக்கே ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டுமென்பது உண்மை.

தண்ணீரில் மூழ்கி "ஞானஸ்நானம்" எடுப்பதே சரியான முறை என்பதை பரிசுத்த வேதாகமம் விளக்கிக் காட்டுகிறது. ஞானஸ்நானம் பெறுகிறவர் தண்ணீரில் மூழ்கும்போது கிறிஸ்துவுடன் அடக்கம் பண்ணப்பட்டதாகவும், தண்ணீரை விட்டு எழும்போது கிறிஸ்துவுடன் எழுந்திருப்பதாகவும் விசுவாசிக்கிறோம். கிறிஸ்துவோடுகூட மரித்தேன், கிறிஸ்துவோடுகூட அடக்கம் பண்ணப்பட்டேன், கிறிஸ்துவோடுகூட உயிரோடு எழும்பினேன் என்பவைகளாகிய முக்கியமான ஆவிக்குரிய உண்மைகளை, "ஞானஸ்நானம்" என்னும் அடையாளச் செய்கையின் மூலம் வெளிப்படுத்துகிறோம்.

"தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார், கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்." - எபே. 2: 4-5.

"ஞானஸ்நானத்தில் அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்டவர் களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர் களாகவும் இருக்கிறீர்கள்." - கொலோ. 2: 12.

"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்." - மாற்கு 16: 16.

"பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்." - அப். 2: 38.

ஞானஸ்நானத்தின் பிரதிபலன்கள்

- **ஞானஸ்நானம் தேவனுடைய ஆலோசனைக்கும், கட்டளைக்கும் நம்மைக் கீழ்ப்படியச் செய்கிறது.**

"யோவானுடைய உபதேசத்தைக் கேட்ட ஆயக்காரர் முதலான

சகல ஜனங்களும் அவனாலே ஞானஸ்நானம் பெற்று, தேவன் நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள்." - லூக். 7: 29.

● **ஞானஸ்நானத்தால் நாம் தேவ நீதியை நிறைவேற்றுகிறோம்.**

"இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான்." - மத். 3: 15.

● **ஞானஸ்நானம் நம்மைக் கிறிஸ்துவுக்குள்ளாக்குகிறது.**

"கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?" - ரோமர் 6: 3.

● **ஞானஸ்நானத்தால் நாம் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுகிறோம்.**

"ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே." - கலா. 3: 27.

● **ஞானஸ்நானம் நாம் தேவனோடு செய்யும் உடன்படிக்கை.**

"அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன் படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்து வினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது." - 1 பேதுரு 3: 21.

● **ஞானஸ்நானம் நாம் தேவனோடு செய்யும் உடன்படிக்கைக்குச் சாட்சி.**

"பூலோகத்திலே சாட்சியிடுகிறவைகள் மூன்று, ஆவி, ஜலம்,

இரத்தம் என்பவைகளே, இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது." - 1 யோவான் 5: 8.

● **ஞானஸ்நானம் நாம் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கிறோம்.**

"இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்." - யோ. 3: 5.

● **ஞானஸ்நானம் நம்மை உயிர்த்தெழுந்த கிறிஸ்துவோடு ஒன்றாக இணைக்கிறது.**

"மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப் பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்." - ரோமர் 6: 4-5.

ஞானஸ்நானத்தின் பின் செய்ய வேண்டியவை

ஞானஸ்நானம் எடுப்பது ஓர் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு ஆரம்பமே. அதையடுத்து தொடர்ந்து ஆவிக்குரிய அனுபவத்திலும், உத்தமமான வாழ்க்கையிலும் வளரவேண்டும், முன்னேற வேண்டும். ஆவிக்குரிய சபையோடும், சபை மக்களோடும் ஐக்கியத்திலும், அந்நியோந் நியத்திலும் உறவுகொள்வதோடு, அனுதினமும் ஜெபத்திலும் வேத வாசிப்பிலும் தரித்திருத்தல் அவசியம். மேலும் ஒவ்வொரு நினைவும், சிந்தனையும், தீர்மானமும், செயற்பாடும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை பிரியப்படுத்துகிறதாயும், அவருக்கென்று சாட்சியாய் வாழ்வதாயும் அமையவேண்டும்.

ஞானஸ்நானம் நம்மை இரட்சிக்காது,
ஆனால் இரட்சிக்கப்பட்டவர்கள் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும்.

பரிசுத்த ஆவியானவர்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தேவ நீதியின்படி முழுக்கு ஞானஸ்நானம் எடுத்த ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவன் அளிக்கும் வரமே பரிசுத்த ஆவியானவர். பரிசுத்த ஆவியானவர் வந்து அந்த விசுவாசி ஒரு பரிசுத்த வாழ்க்கை வாழ ஆவிக்குரிய ஜீவனை அளிக்கிறார். ஆண்டவராகிய இயேசு வாக்குத்தத்தம் பண்ணின இந்த பரிசுத்த ஆவியானவர் தனிப்பட்ட முறையில் விசுவாசிக்குப் போதனையளித்து வழி நடத்துவதற்காக அவனுக்குள் வாசம்பண்ண வருகிறார். மேலும், விசுவாசிக்குள் வாசம்பண்ணும்படி பரிசுத்த ஆவியானவரை அளிப்பதோடு மட்டுமின்றி, அவன் ஊழியம் செய்யவும், இவ்வுலகில் தேவனை மகிமைப்படுத்தவும் வல்லமையைப் பெறும்படி, அவனை பரிசுத்த ஆவியானவரால் நிரப்பவும், அவருக்குள் அபிஷேகம் செய்யவும் தேவன் விரும்புகிறார்.

“பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது..” - அப். 2: 38-39.

“பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து

இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்தஆவி இன்னும் அருளப்படவில்லை.” - யோவான் 7: 37-39.

பரிசுத்த ஆவியானவரின் கிரியைகள்

இரட்சிக்கப்பட்ட ஒரு விசுவாசி பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறுகிறான். அவனுக்குள் வாசம் செய்யும் ஆவியானவர், அவனுக்கும் அவன் மூலமாகவும் பின் குறிப்பிட்டுள்ள பல வகையான கிரியைகளை நடப்பிக்கிறார்.

1. சாட்சி கொடுக்கிறார்

“நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்” - ரோமர் 8: 16.

2. போதிக்கிறார்

“என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.” - யோவான் 14: 26.

3. வழிநடத்துகிறார்

“மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.” - ரோமர் 8: 14.

4. நல் வாழ்வு வாழ வைக்கிறார்

“பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.” - கலா. 5: 16.

5. ஜெபிப்பதற்கு உதவுகிறார்

"அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்ன தென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக் கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்." - ரோமர் 8: 26.

6. சரீரத்திற்கு ஜீவனை அளிக்கிறார்

"அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்." - ரோமர் 8: 11.

7. சாட்சி கூறுவதற்கான துணிவை அளிக்கிறார்

"பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்." - அப். 1: 8.

8. ஆவியானவரின் வரங்களை தெரிவிக்கிறார்

"ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற் கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது." - 1கொரி.12: 7-10.

9. இயேசுவுக்கு சாட்சி பகருகிறார்

"நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலை செய்த இயேசுவை நம்முடைய பிதாக்களின் தேவன் எழுப்பி, இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்தினாலே உயர்த்தினார். இந்தச் சங்கதிகளைக் குறித்து நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம், தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்தஆவியும் சாட்சி என்றார்கள்." - அப். 5: 30-32.

10. தேவ வார்த்தையைப் புரிய வைக்கிறார்

"எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவு மில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை, நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப் படுத்தினார், அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்." - 1 கொரி. 2: 9-10.

11. தேவனை ஆராதிக்க ஆவியினால் நிறைக்கிறார்

"... ஆவியினாலே நிறைந்து, சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து,..." - எபே. 5: 18-20.

12. ஆண்டவராகிய இயேசுவை மகிமைப்படுத்துகிறார்

"சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார், அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர்

என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினல் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் எனனுடையவைகள், அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்." - யோவான் 16: 13-15.

பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெறுவது எப்படி?

பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் சில தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்பதை தேவன் எம்மிடம் எதிர்பார்க்கிறார். அத்தேவைகளைக் குறித்த விபரங்கள் அடங்கிய வேத வசனங்களை பரிசுத்த வேதாகமத்திலிருந்து கவனித்துக் கற்றுக் கொள்வோம்.

"இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர் களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்னசெய்யவேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் **மனந்திரும்பி**, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே **ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்**, அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்." - அப். 2: 37-38.

1. மனந்திரும்ப வேண்டும்

மேலே காணப்படும் வேத வசனப்படி ***பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்*** என்னும் வாக்குத்தத்தம் எமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு அதைப் பெறுவதற்கு ***மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்*** என்ற நிபந்தனை துலக்கமாக கூறப் பட்டுள்ளது. மனந்திரும்புதல் என்பது பாவத்திலும் அக்கிரமத்திலும் வாழ்பவர்கள் எந்தவித நிபந்தனையுமின்றி தம்மை கடவுளுடைய முழு கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுப்பதாகும்.

"பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் **மனந்திரும்பி**, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது

பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்." - அப். 2: 38.

2. ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும்

ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுதல் என்பது தேவ நீதிக்கு அமைய கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலோடு சம்பந்தப்பட்ட தனிப்பட்ட அனுபவமாக, முழுக்கு ஞானஸ்நானம் பெறுவதாகும். ஆகையால், பரிசுத்த ஆவியின் நிறைவைப்பெற இந்த அடிப்படை தேவை மிகவும் அவசியம். ஆண்டவராகிய இயேசு தாமே இந்த நீதியை கடைப்படிக்கிறதை வேதத்தில் காண்கிறோம்.

"அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவைவிட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்குத் தடை செய்து: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான். இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது, தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்தி லிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது." - மத். 3: 13-17.

3. ஆண்டவரிடம் கேட்க வேண்டும்

ஆண்டவராகிய இயேசு சொன்னதாவது :

"மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: ***கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்,*** தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள், தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும்

பெற்றுக் கொள்ளுகிறான், தேடுகிறவன் கண்டடைகிறான், தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் மீனுக்குப் பதிலாய்ப் பாம்பைக் கொடுப்பானா? அல்லது முட்டையைக் கேட்டால், அவனுக்குத் தேளைக் கொடுப்பானா? பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்." - லூக். 11: 9-13.

பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப்பெற இங்கே இன்னுமொரு சாதாரண தேவையை மேலே குறப்பிட்ட வசனம் விபரிக்கிறது. பரம பிதாவான தேவன் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்று ஆண்டவராகிய இயேசு சொன்னார். ஆகையால் நாம் தேவனிடத்தில் வாஞ்சித்து கேட்கவேண்டும், கேளுங்கள் அப்பொழுது தரப்படும். எனவே எமது பரிசுத்த வாழ்க்கைக்குத் தேவையான பரிசுத்த ஆவியானவரின் நிறைவுக்காக தேவனிடம் வாஞ்சித்து விண்ணப்பித்துக் கேட்போம்.

4. தாகமாய் இருக்க வேண்டும்

தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்.

மேலும் பரிசுத்த ஆவியானவரின் நிறைவுக்குத் தேவையான மூன்று சாதாரண தேவைகளை கீழ்க்காணும் வசனம் விபரிக்கிறது:

"பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் ***தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்.*** வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்.

தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச்சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்தஆவி இன்னும் அருளப்படவில்லை." - யோவான் 7: 37-39.

இந்த வசனத்திலே ஜீவ தண்ணீர் என்று குறிப்பிடப்பட்டுள்ள பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெறுவதற்கு, ***தாகமாய் இருக்கிறவன்*** தம்மிடத்தில் வந்து பானம்பண்ணும்படி ஆண்டவராகிய இயேசு சொல்லுவதைப் பார்க்கிறோம்.

முதலாவது, எமக்கு பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெற வேண்டும் என்ற தாகம் நமக்கு இருக்கவேண்டும். அப்படியான தாகம் இல்லாமையால் அநேகர் பரிசுத்த ஆவியானவரின் நிறைவை பெற முடியாதபடி இருக்கிறார்கள். தேவன் தமது ஆசீர்வாதங்களை ஒருவர் தானாக விரும்பாத பட்சத்தில் எவருக்கும் கட்டாயப்படுத்தி கொடுப்பதில்லை. தாகம் என்பது முக்கிய தேவையான ஒரு நிலை, எம்மிடம் இருப்பதைவிட இன்னும் கூடுதலாக ஒரு தேவை என்பதை உணர்த்துகின்ற நிலைமை. மேலும் தாகம் சரீரத்தின் தேவையை உணர்த்துகிற ஓர் முக்கிய உணர்வு. உலகில் ஒரு வரட்சியான பிரதேசத்தில் கடந்து போகும்போது எவ்வளவாக தண்ணீர்த் தாகம் ஏற்பட்டு அத்தாகத்தைப் போக்க எம்மாலான எல்லா முயற்சிகளையும், ஊக்கமாகவும் உடனடியாகவும் செயற்படுவோம். அப்படியே பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெற வேண்டிய தாகம் எமக்கு இருக்க வேண்டும்.

5. இயேசுவிடம் வரவேண்டும்

இயேசு சொன்னார் ஒருவன் தாகமாயிருந்தால் ***என்னிடத்தில் வந்து***, பானம்பண்ணக்கடவன்.

"மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானஞ் கொடுக்கிறேன், எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல, அவர் பரிசுத்த ஆவியினாலும்

அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்." - மத்தேயு 3: 11.

பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுப்பவரான இயேசுவிடம் வர வேண்டும். அந்த இயேசு தாமே உங்களை அழைக்கிறார்.

6. பானம்பண்ண வேண்டும்

மேலும் இயேசு சொன்னதாவது: ***பானம்பண்ணக்கடவன்*** இந்த சாதாரண வார்த்தைக்குச் சிலர் கவனம் கொடுப்பதில்லை. பானம் பண்ணுதல் என்பது ஒருவர் தன் சுய தீர்மானத்தோடு உட்கொள்கிற செயல். அப்படியே பரிசுத்த ஆவியையும் பெற்றுக்கொள்வது அவசியம். "கடவுளுக்கு விருப்பமென்றால் தரட்டும்" என்பது பானம் பண்ணுதல் அல்ல, தாகம் கொண்டு, இயேசுவிடம் வந்து, வாஞ்சையோடு ஏற்றுக்கொண்டு பானம் பண்ண வேண்டும்.

7. சரீரத்தை ஒப்புக்கொடுக்க வேண்டும்

"உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிற தென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே, ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்." - 1 கொரி. 6: 19.

எமது சரீரம் தேவனுடைய ஆலயமாய் இருக்கிறபடியால், பரிசுத்த ஆவியானவர் எங்களுக்குள் வாசம்செய்ய நாம் எம்மை முழுமையாக தேவனிடம் ஒப்புக்கொடுக்க வேண்டும். மேலும் எமது சரீரத்தின் ஒவ்வொரு அவயவங்களையும் அவருடைய சேவைக்கென அர்ப்பணித்து வாழவேண்டும்.

"நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள்." - ரோமர் 6: 13.

பரிசுத்த ஆவியின் நிறைவுக்கான ஏழு தேவைகள்

பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெற்று ஒரு பரிசுத்த வாழ்க்கை வாழ இங்கே கொடுக்கப்பட்டுள்ள ஏழு தேவைகளையும் ஒழுங்குபட இங்கே தருகிறோம் :

- ✯ **மனந்திரும்ப வேண்டும்**
- ✯ **ஞானஸ்நனம் பெற வேண்டும்**
- ✯ **ஆண்டவரிடம் கேட்க வேண்டும்**
- ✯ **தாகமாய் இருக்க வேண்டும்**
- ✯ **இயேசுவிடம் வர வேண்டும்**
- ✯ **பானம்பண்ண வேண்டும்**
- ✯ **சரீரத்தை ஒப்புக்கொடுக்க வேண்டும்**

மேலே கொடுக்கப்பட்ட தேவைகளைக் கைக்கொண்டு நடக்க ஜெபம் மிகவும் அவசியம். அதற்கான கீழ்க்காணும் சிறிய ஜெபம் உங்களுக்கு உதவுமென நம்புகிறேன்.

ஆண்டவராகிய இயேசுவே!

பரிசுத்த ஆவியானவரின் நிறைவுக்காக நான் தாகமாய் இருக்கிறேன். எனது உடலை உங்கள் ஆலயமாகவும், அதன் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகவும் பிரயோகிக்க முழுமையாக என்னை ஒப்புக் கொடுக்கிறேன். உங்கள் பரிசுத்த ஆவியினால் என்னை நிரப்பி, என் உதடுகளிலிருந்து உங்களைத் துதிக்கும் துதியும், ஆராதனையும், ஸ்தோத்திரமும் ஜீவ ஊற்றாகக் கடந்துவர ஜெபிக்கிறேன். ஆமென்! ஆமென்!!

பரிசுத்தவான்

பரிசுத்த தேவனையும் அவருடைய குணாதிசயங்களையும், அவருடைய மகத்துவமான செயல்களையும், பாவியான மனுஷனை பரிசுத்தனாக்க அவர் தாமே ஏற்படுத்திய இலகுவானதும், இலவசமானதுமான வழியையும், மேலும் அவன் பரிசுத்தத்தில் வாழ அவர் அளித்த தேற்றரவாளரான பரிசுத்த ஆவியானவரையும் குறித்த பல விபரங்களை இப்புத்தக ஆரம்பம் முதல் இதுவரை வாசித்து அறிந்திருக்கிறீர்கள். இந்த வழியில் ஒவ்வொரு பாவியான மனுஷனும் தனது பாவத்திற்கு மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு பாவ மன்னிப்பைப் பெற்று, தேவ நீதியின்படி முழுக்கு ஞானஸ்நானம் பெறும் பொழுது பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறுகிறான். அப்பொழுது அவனுக்குள் வாசஞ்செய்யும் ஆவியானவர் அவனை சகல தேவ நீதிக்குள்ளும் வழி நடத்துகிறார். அந்த நபரும் பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலுக்குத் தன்னை முழுமையாக ஒப்புக் கொடுத்து, தேவ சத்தியத்தின்படி ஜீவிப்பதன்மூலம் ஒரு பரிசுத்தவானாக நடைபோடலாம். இப்படியாகப் பெற்ற பரிசுத்தத்தைக் காத்துக்கொண்டு, பரலோக ராட்சியத்திற்குப் போவோம் என்ற நிச்சயத்தோடு வாழ்வதற்கு அவனுடைய ஜெப வாழ்க்கையும், வேத வசனப் படிப்பும், ஸ்தோத்திரம், துதி, ஆராதனை, சபை கூடுதல் போன்றவை மிகவும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

"ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ***ஜெபம்பண்ணி*** விழித்திருங்கள் என்றார்." - லூக். 21: 36.

"என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி, என் ஆத்தாவே, கர்த்தரை ***ஸ்தோத்திரி,*** அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே." - சங்கீதம் 103: 1-2.

"ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை நல்லது, என் உதடுகள் உம்மைத் துதிக்கும். என் ஜீவனுள்ளமட்டும் நான் உம்மைத் ***துதித்து***, உமது நாமத்தைச் சொல்லிக் கையெடுப்பேன்." - சங். 63: 3-4.

"உம்முடைய ***வசனம்*** என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது." - சங். 119: 105.

"நீர் என்னை நம்பப்பண்ணின ***வசனத்தை*** உமது அடியேனுக்காக நினைத்தருளும். அதுவே என் சிறுமையில் எனக்கு ஆறுதல், உம்முடைய ***வாக்கு*** என்னை உயிர்ப்பித்தது." - சங். 119: 49-50.

பரலோக இராட்சியத்துக்குரிய வாழ்க்கை

சாத்தானின் ஆளுகையிலிருந்தும், தலைமைத்துவத்திலுமிருந்தும் நாம் விடுவிக்கப்பட்டுள்ளோம். நாம் இப்பொழுது ஆண்டவராகிய இயேசுவினுடைய அதிகாரத்தின் கீழும், ஆளுகையின் கீழும் இருக்கிறோம். ஆகையால் ஆண்டவருக்குள் தனது புதிய வாழக்கையை ஆரம்பித்து வளரத்துவங்கும் ஒரு விசுவாசி, இயேசுவோடு சரியான உறவு கொண்டிருப்பது மிகவும் அவசியம்.

இயேசு கிறிஸ்து தனது மீட்பர், இரட்சகர், ஆண்டவர், நியாயந்தீர்க்க வரப்போகின்ற நியாயாதிபதியும், தமது இராஜ்யத்தில் இராஜாவாக இருக்கிறார் என்பவற்றை உணர்ந்தவனாய், அவருடன் இருக்கும் உறவில் முழுமையாக நிலைத்திருக்க வேண்டும்.

"அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி,..." - எபி. 5: 8-9.

"ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக் கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக." - கொலோ. 2: 6-7.

"மேலும், தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்க வேண்டுமென்று, தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள்." - 1 தெச. 2: 11-12.

"நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படியே இனி நடவாமல்,

கீழ்ப்படிகிற பிள்ளை களாயிருந்து, உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்த ராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்த ராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே." - 1 பேதுரு 1: 14-16.

தீர்மானமும் அர்ப்பணிப்பும்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் சிந்திய இரத்தம் எவ்வாறு தேவனுக்கும் சாத்தானுக்கும் மனிதனுக்கும் முக்கியம் உள்ளதாய் அமைந்திருக்கிறது என்பதை இப்போ நான் சரிவர புரிந்து கொண்டுள்ளேன். எனது பாவங்களை மன்னிப்பதாகவும், பாவங்களிலிருந்து என்னைச் சுத்திகரிப்பதாகவும், சாத்தானின் தீமையிலிருந்து என்னைப் பாதுகாப்பதாகவும் தேவன் என்னோடு செய்து கொண்ட உடன்படிக்கையை நான் என்றும் நினைவு கூறுவேன். இயேசு சிலுவையில் மரித்தபோது, தேவன் எனக்காகச் செய்து முடித்தவற்றை இன்று நான் முழுமையாக விசுவாசிக்கிறேன். எனது பாவத்திற்கான தண்டனையை அவரே ஏற்றுக்கொண்டார் என்று நான் விசுவாசிக்கிறேன். தேவன் எனக்கு அருளும் மன்னிப்பை நான் பெற்றுக்கொள்கிறேன். இதன்மூலம் அவரோடு எனக்குக் கிடைக்கும் உறவுக்காக நான் அவருக்கு நன்றி செலுத்துகிறேன், ஆண்டவரோடுள்ள உறவில் நான் ஒவ்வொரு நாளும் வாழ்வேன். நான் பெற்றுக்கொண்ட இந்த மீட்பின் சத்தியத்தை நான் கைக் கொள்வதுமல்லாமல் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும்படி என்னை அர்ப்பணிப்பதாகவும் இன்று நான் தீர்மானம் மேற்கொள்கிறேன்.

ஜெபம்

ஆண்டவராகிய இயேசுவே! என் வாழ்க்கையைச் சீர்ப்படுத்த எனக்குள் வாரும். நீர் தேவனுடைய குமாரன் என்பதையும், என்னுடைய பாவங்களுக்காகவும் சிலுவையிலே இரத்தம் சிந்தி மரித்தீர் என்பதையும், மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தீர் என்பதையும் நான் விசுவாசிக்கிறேன். நான் பாவி என்பதை அறிக்கை செய்கிறேன். என் பாவங்களை தயவாய் மன்னித்து, என்னைச் சுத்திகரித்து என் இருதயத்தில் வாசஞ்செய்ய வாரும். உம்மை என் இரட்சகராகவும் மீட்பராகவும் ஏற்றுக்கொள்கிறேன். என்னை நீர் வழிநடத்தும், நான் உம்மை நேசிக்கிறேன்.

கிறிஸ்து இயேசுவிற்குள் அன்பான சகாதர சகோதரிகளே!

நீங்கள் வாசித்து முடித்த இப்புத்தகம் உங்கள் ஆன்மீக வாழ்க்கைக்கும், பரிசுத்த ஜீவியத்திற்கும் உறுதுணையாகவும் உதவியாகவும் இருந்திருக்குமென்று விசுவாசிக்கிறேன். பரிசுத்த ஆவியானவரின் நிறைவோடும் அவருடைய வழி நடத்துதலோடும் உங்கள் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ள கர்த்தராகிய தேவனும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும் உங்களுக்கு ஒத்தாசை அளிக்க வேண்டுமென்று ஜெபிக்கிறேன். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

பாஸ்டர் S.அல்பிரட் செருபிம்
மீட்பர் கிறிஸ்து சபை
பிரம்டன்,
கனடா.

Pastor.S.Alfred Cherubim
Redeemer Christ Assembly
Brampton, ON. L6R 2C1
Canada

E-mail : Alfred_]cherubim@rogers.com

Web : www.redeemerchristassembly.org